

LUX
LUX TOILET SOAP
பத்மா தன் மேனியை
லக்ஸ் டாய்லட் சோப்பினுல்
மிருதுவாகவும் மென்மையாகவும்
வைத்துக்கொள்கிருர்
LTS. 179-111 TM
★ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ★


அவனுடைய துண்டுகள் இப்பொழுது
எவ்வளவு வெண்மையாகவும்
சுத்தமாகவுமிருக்கின்றன
அது ஸன்லைட்டினால் தான்!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்
அழுத்தித் துவைக்காமலே துணிகளை
வெண்மையாகச் சலவை செய்கிறது
S. 97-111 TM

T. K. S.

சகோதரர்களின்

நாடகம்

★

கோவை சண்முக

அரங்கில்

★

24-2-48 முதல்

2-வது வாரம்

★

ஸ்ரீ கிருஷ்ண-லீலா

★

புதன், ஞாயிறு, மாலை 6-30

மற்ற நாட்கள் இரவு 9-30

பிரதி திங்கள் விடுமுறை நாள்

★

டிக்கெட் விபரம்:

ரூ. 4-0-0, 2-12-0, 1-10-0, 0-13-0, 0-6-6

தாயின் யோசனை க்ருஷன் சாப்பிடத்தான்!

கடுமையான முதுகு வலிக்கு

முதல் பாட்டிலிலேயே நிவாரணம்

அவனது தாயின் யோசனையின் பேரில் க்ருஷன் சால்ட்ஸ் சாப்பிட்டதால்தான் அவனது முதுகு வலி நீங்கியது. கணக்கற்ற வேறு மருந்துகளைச் சாப்பிட்ட போதிலும் அவனுக்கு வலி நீங்கவே இல்லை. ஆனால் ஒரு பாட்டில் க்ருஷன்ஸ் சாப்பிடு முன்பே அவனுக்கு குணம் தெரிந்தது. இந்தக் கடிதத்தில் எழுதுகிறான்:—

"சென்ற வருஷத்தில் இதே நாட்களில் மூன்று வாரங்களுக்கு முதுகில் கடுமையான வலியால் கஷ்டப்பட்டேன். படுக்கையை விட்டு எழுவே இல்லை. அநேக பிரபலமான மருந்துகளை உபயோகித்துப் பார்த்தேன். ஏதாவது பலன் கிட்டினால்தானே?

"பிறகு என் அவஸ்தையைக் குறித்து என் தாயாருக்குக் கடிதம் எழுதினேன். மறு தபாலிலேயே என் தாயார் என்னைக் க்ருஷன் சால்ட்ஸ் சாப்பிடுமாறு வற்புறுத்தி கடிதம் எழுதினாள். உடனே ஒரு பாட்டில் க்ருஷன் வாங்கினேன். உண்மையாக நான் ஐந்தாவது முறை சாப்பிட்ட போதே என்னால் உட்கார முடிந்து விட்டது. தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே வந்ததில் இரண்டு வாரங்களுக்குள்ளேயே சொஸ்தமடைந்தேன். இந்த விசித்திரமான மருந்தை நான் சாப்பிடத் தவறியதே இல்லை. பிரதி தினமும் நான் சாப்பிடும் சிறிய அளவு க்ருஷன் என்னை திடகாத்திரமாக வைத்திருக்கிறது."

—(மிஸஸ்) ஏ. ஜீ.

மனித சரீரத்திற்கே மூத்திர கோசம் ஒரு வடிகால் போன்றதாகும். அது சரிவர வேலை செய்யாவிட்டால், சில கழிவு அமிலங்கள் வெளியேற்றப் படாமல் இரத்த ஓட்டத்தையே பாழாக்கி முதுகு வலி, மூட்டுவாதம், மிகுந்த ஆயாஸம் ஆகிய நோய்களின் அறிகுறியை உண்டாக்குகிறது. கழிவுப் பொருள்களை வெளியேற்ற மூத்திர கோசத்திற்கு அனுகூலம் செய்யக்கூடிய அருமருந்து க்ருஷன் சால்ட்ஸ்தான்.

எல்லா வியாபாரிகளும் கெமிஸ்டுகளும் க்ருஷன் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 1-10-0 வீதம் விற்பனை செய்கின்றனர்.





நீங்கள் தொடும் ஒவ்வொரு
கதவின் கைப்பிடியிலுமுள்ள
அழுக்கினாலும் கிருமிகளாலும்
அபாயம் ஏற்படும்!
லைப்பாய் சோப்பினால் அடிக்கடி
சுத்தம் செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய் சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களைக் காப்பாற்றுகிறது
LIFEBUOY
SOAP
L. 98-111 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 30	பிப்ரவரி 22	சர்வசித்து ௵ மாசி 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.


நாளுக்கு நாள்
உங்கள் சருமம் அதிக அழகைப்பெறும்!
கேடில் கலந்த சோப் ரெக்ஸோனா ஒன்றே. அது உங்கள் சருமத்திற்கு புத்துயிரளிக்கும் பரிசுத்தத்தையும் புதுப்பொலிவையும் தரும்.
தினமும் தவறாமல் ரெக்ஸோனா சோப் உபயோகிக்க ஆரம்பியுங்கள். வெகு சீக்கிரத்திலேயே உங்கள் சருமம் ஆச்சரியமான மாறுதலடைவதை காண்பீர்கள். சருமத்தை சுத்தம் செய்து, மிருதுவாக்கி ஆரோக்கியமூட்டும் சக்திவாய்ந்த தைலங்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட கலப்பு மருந்து கேடில். இது உங்கள் சருமத்தை அதிக ஆரோக்கியமுள்ளதாகவும், அப்பழுக்கற்றதாகவும், திடமாகவும் செய்ய உதவுவதுடன், நீடித்துநிற்கும் புதியதொரு சோபையையும் பெறச்செய்யும்.
கேடில் சேர்ந்த ரெக்ஸோனாதான் இதைச்செய்கிறது!
Rexona
ரெக்ஸோனா
சோப்
RP. 88-172 TM

என்ன சேதி?

அடுத்த இதழில்

அலகாபாத் பிரயாகையில் பிப்ரவரி 12ல் நடைபெற்ற சரித்திர நிகழ்ச்சியைப் படம் எடுத்து வருவதற்கென்று "கல்கி" பத்திரிகையின் சார்பாக ஸ்ரீ எல்லிஸ் ஆர். டங்கனை அனுப்பி யிருந்தோம். டில்லியிலிருந்து அலகாபாத்துக்குச் சென்ற ஸ்பெஷல் ரயிலில் ஸ்ரீ டங்கனும் பிரயாணம் செய்து பல அற்புதமான படங்களை எடுத்து வந்திருக்கிறார். இந்தப் படங்களும் கல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சிகளின் படங்களும் நமது அடுத்த இதழில் வெளியாகும்.

பாராட்டுகிறோம்

பண்டைக் காலத்து ராட்சஸர்கள் எத்தனையோ அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். இருந்தாலும் இந்தக் காலத்து வகுப்பு வெறியர்கள், அந்த ராட்சஸர்களை நல்லவர்கள் என்று நாமும் நமது சந்ததிகளும் கூறும்படி செய்து விட்டார்கள்!

துவேஷத்தையும் பலாத்காரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சென்ற பல வருஷங்களாகப் பரவி வந்த வகுப்பு வெறி பாரத நாட்டைப் பிளந்து ஜனங்களைக் கொன்று குவித்ததுடன் நில்லாமல், உலக சரித்திரத்திலே ஈடு இணையற்ற ஒரு மகானையே கடைசியாக பலி கொண்டுவிட்டது. எனவே, அத்தகைய வகுப்பு வெறியை அடியோடு ஒழித்துத் தீரவேண்டும். பெறுதற்கரிய மகத்தான பொக்கிஷத்தை நாம் பறிகொடுக்கும்படி செய்த அந்த வகுப்புத் துவேஷத்தை அறவே ஒழிக்க உறுதி கொண்டிருக்கும் இந்திய சர்க்காரையும் மாகாண சர்க்கார்களையும் பெரிதும் பாராட்டுகிறோம்.

இன்றைய உலகில் ஜனநாயகத்தின் பெயரால் எத்தனையோ அக்கிரமங்கள் நடைபெற்று வருகின்றன. தனிப்பட்ட ஸ்தாபனங்கள் தங்களுக்குச் சொந்தமாக படைகளை நிறுவிக் கொண்டிருப்பதும் அத்தகைய அக்கிரமங்களில் ஒன்றாகும். அராஜகமும் அநாகரிகமுமான அத்தகைய காரியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் அணுவளவும் சம்பந்தம் இல்லை. தனிப்பட்ட ராணுவத்தை நிறுவிய ஹிட்லரும் முஸோலினியும் மண்ணோடு மண்ணாகிவிட்டார்கள். சீனாவின் இன்றைய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தனிப்பட்ட ராணுவமே காரணமாகும்.

தனிப்பட்ட படைகள் எதற்காக? தேசத்தில் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கப் போலீஸ் படை இருக்கிறது. பெரும் கலகங்களையும் உள் நாட்டுப் போர்களையும் சமாளிக்க சர்க்கார் ராணுவம் இருக்கிறது. அப்படியிருக்க, தனிப்பட்ட ஸ்தாபனங்கள் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்ட படைகளை வைத்துக்கொள்வது ஜனசமுதாயத்துக்கே ஆபத்தாகும். எனவே, இந்தியாவில் அத்தகைய ஆபத்தை விளைவித்து வரும் ராஷ்ட்ரீய சுயம் சேவா சங்கப் படை, முஸ்லிம் தேசியப் படை, காக்ஸார் படை முதலியவைகளைச் சர்க்கார் சட்டவிரோத மாக்கியது குறித்து ஜனங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கலைத்துவிட வேண்டும்

தனிப்பட்ட படைகள் ஜன சமுதாயத்துக்கு எவ்வளவு ஆபத்தானவையோ, அதுபோலவே வகுப்புவாத ஸ்தாபனங்களும் ஆபத்தானவைதான். எனவே வகுப்புவாத ஸ்தாபனங்களைக் கலைத்துவிட வேண்டியது அவசியமாகும். இவ்விஷயத்தில் ஐக்கிய மாகாண முஸ்லிம் லீக் வழிகாட்டி யிருப்பதைக் குறித்து மகிழ்ச்சி யடைகிறோம். சென்ற பத்து வருஷங்களாக இருந்து வரும் மேற்படி முஸ்லிம் லீகை இந்த மாதக் கடைசியில் கலைத்து விடுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள். மற்ற மாகாணங்களிலுள்ள முஸ்லிம் லீக் ஸ்தாபனங்களும் அந்த முறையைச் சிறிதும் தாமதமின்றிப் பின்பற்றுமென எதிர்பார்க்கிறோம். அகில இந்திய ஹிந்து மகா சபையோ வென்றால், இனி

எவ்வித அரசியல் அலுவல்களிலும் ஈடுபடுவதில்லை என்று தீர்மானித்திருக்கிறது. அந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்கதே யெனினும், அது மாத்திரம் போதாது. ஹிந்து மகா சபையையே அடியோடு கலைத்து விடுவதுதான் புத்திசாலித்தனமாகும். சற்றேறக் குறைய நாட்டில் தொண்ணூறு சத விகிதமுள்ள சமூகத்தின் மத உரிமைகளைப் பாதுகாக்கத் தனி ஸ்தாபனம் இருக்க வேண்டிய அவசியமே இல்லை. மதம், பொருளாதாரம், அரசியல் முதலிய சகல துறைகளிலும் ஜனங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கம் இருக்கிறது. மற்றும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவினரும் ஜனநாயக முறைப்படி தங்கள் தங்களுடைய உரிமைகளை ஸ்தாபித்துக் கொள்ளவும் சுதந்திர சர்க்காரில் இடம் இருக்கிறது.

சர்க்கார் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றி வரும் இச்சமயத்தில், ஜனங்கள் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான கடமை யொன்றும் இருக்கிறது. இன்னும் நாலு அல்லது ஐந்து வருஷ காலத்துக்காவது காங்கிரஸைத் தவிர வேறெந்த அரசியல் கட்சிகளும் இருக்கக்கூடாது. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்கும்படி செய்த காங்கிரசுக்குத் தேசத்தில் சுபிட்சம் ஏற்படும்படி செய்யவும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டாமா? நாட்டில் பல்வேறு பிரச்னைகளும் தீர்ந்து சுதந்திரம் நிலைத்து சுபிட்சமும் ஏற்பட்ட பின்தான் ஜனநாயக முறைப்படி எதிர்க் கட்சிகள் ஏற்படுவதில் அர்த்தம் உண்டு. அதுவரையில் சகலரும் காங்கிரஸ் சர்க்காருடன் ஒத்துழைத்து வரவேண்டியது அத்தியாவசியமாகும்.

காந்திஜீ உகந்த தொண்டு

"வாய்ச் சொல்லில் வீரரடி!" என்று பாரதியார் கூறிய கூட்டத்தைக் காந்தி மகான் சேர்ந்தவர் அல்ல என்பது அனைவரும் அறிந்ததே. எனினும் உடம்பெல்லாம் ரணமாயிருந்த குஷ்டரோகியைக் கையால் தொட்டுச் சிகிச்சை செய்யும் அளவுக்கு மகாத்மா கர்ம வீரர் என்பது அநேகருக்குத் தெரியாது. மேலேயுள்ள படத்தில் காந்திமகான் அத்தகைய பணி செய்வதைக் காணலாம்.

குஷ்ட ரோக நிவாரணம் மகாத்மாவின் மனதுக்கு உகந்த சேவைகளில் ஒன்று. கடந்த மாதம் 22, 23 தேதிகளில் அன்னை கஸ்தூரிபாயின் பேரால் நடக்கும் குஷ்ட ரோக வைத்திய சாலையின் உதவிக்காகத் தொண்டர்கள் பண உதவி கேட்க உங்களிடம் வருவார்கள். இயன்ற வரை உதவி புரியுங்கள்.



நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி



நீரிலே கரைந்தார்! நெஞ்சினில் உறைந்தார்!

கண்டதில்லை; கேட்டதில்லை! முன்னும் இல்லை; பின்னும் இல்லை!

பிப்ரவரி மாதம் 12உ காந்தி மகானுடைய அஸ்திக்கு நடந்த மரியாதைகளைப் போல இந்த உலகம் தோன்றின காலந் தொட்டு நடந்ததில்லை.

இன்று வரை மானிடராய்ப் பிறந்த எவருக்கும் நடைபெறாத சிறப்புக்கள் காந்தி மகானுடைய பூத உடலின் சிறு துகள்களுக்கு நடைபெற்றதைக் கண்டோம்; கேட்டோம்; படித்தோம்.

கங்கையும் யமுனையும் சந்திக்கும் புண்ணியப் பிரயாகையிலே நாற்பது லட்சம் மக்கள் திரண்டு வந்து மகாத்மாவுக்கு மரியாதை செய்தார்கள். காந்தி மகானுடைய அருமைப் புதல்வர்களும் பந்துக்களும் அவருடைய அன்புக்குகந்த ஞானப் புதல்வர்களான ஜவாஹர், பட்டேல் முதலியவர்களும் கிரியைகளை நடத்தினார்கள்.

பாஞ்சாலத்தில் பாயும் பஞ்ச நதிகளில் ஒன்றாகிய ஸட்லெஜ் நதியில் பத்து லட்சம் ஜனங்கள் கூடி நின்று மகாத்மா காந்தியை நினைத்து உருகினார்கள்; சமீபத்தில் அந்த நாட்டில் நடந்த பாதகங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டார்கள்.

பீஹாரின் கவர்னர் ஆனே புண்ணிய நதி சங்கமத்தில் பல லட்சம் மக்களுக்கு நடுவில் காந்தி மகானின் அஸ்திகளின் ஒரு பகுதியைக் கரைத்து விட்டுக் கரையேறினார்.

கல்கத்தா நகருக்குப் பதினைந்து மைல் தூரத்தில் கங்கா நதியின் கட்டத்தில் மகாத்மாவின் அஸ்தியை அவருடைய அந்தரங்க அன்புக்குகந்த ராஜாஜி கங்கை நீருடன் தம் கண்ணீரையும் சேர்த்துக் கரைத்தார். பார்த்திருந்த பதினைந்து லட்சம் மக்களும் கண்ணீர் வடித்தார்கள்.

பம்பாய் நகரின் பிரசித்தி பெற்ற சௌபாத்தி கடற்கரையில் பல லட்சம் மக்கள் திரளாகக் கூடி அங்கே பல தடவை நடந்த மாபெருங் கூட்டங்களில் உபதேச மொழிகளைப் புகன்ற பெருமானை நினைத்து அலறினார்கள்.

கோதாவரி நதியில் பஞ்சவடிக்கு அருகில் பம்பாய்ப் பிரதம மந்திரி காந்தி மகானுடைய பூத உடலுக்கு இறுதிச் சடங்கை நடத்தினார். கிருஷ்ணா நதியில் சென்னை மந்திரி காளா வெங்கட்ராவ் நடத்தினார்.

சென்னைக் கடற்கரையில் ஐந்து லட்சம் ஜனத் திரளுக்கு மத்தியில் காந்தி மகானுடைய அஸ்தித் துகளைக் கடலிலே கரைக்கும் பாக்கியம் மகாத்மாவின் உண்மைச் சீடரான நமது பிரதம மந்திரி ரெட்டியாருக்குக் கிடைத்தது. இந்தியா தேசமெங்கும் சடங்குகள் நடந்த பிறகு மாலை ஆறு மணிக்குப் பிரதம மந்திரி கனம் ரெட்டியார் கரைக்க மனமில்லாமல் காந்திஜியின் அஸ்தியைக் கரைத்தார். சாத் துணியுடனே உடல் நடுங்க உள்ளம் நடுங்க நாவும் நடுங்க மகாத்மாவின் உபதேசங்களைப் பின்பற்றும்படி தமிழ் மக்களை வேண்டிக் கொண்டார்.

இரண்டு ஆறுகளின் நடுவில் பள்ளி கொண்ட பெருமானுடைய சந்நிதியில் காவேரி நதியில் மூன்று லட்சம் மக்கள் கூடி நின்று மகாத்மாவினிடம் தங்கள் அளவில்லாத பக்தியைத் தெரிவித்துக் கொண்டார்கள். இரு தமிழ் மந்திரிகள் அஸ்தியைக் கரைத்தார்கள்.

பண்டரி புரத்துக் கருகிலுள்ள சந்திரபாகா நதியிலும் நர்மதையிலும் துங்கபத்திரையிலும் காசியிலும் இராமேசுவரத்திலும் வட மதுரையிலும் தென் மதுரையிலும் காஷ்மீரத்திலும் கன்னியா குமரியிலும் புண்ணிய தீர்த்தம் என்று பெயர் பெற்ற இடங்களில் எல்லாம் காந்தி மகானுடைய தேகத் துகள்கள் கரைக்கப்பட்டன.

ஒவ்வோரிடத்திலும் லட்சக் கணக்கான மக்கள் திரள் திரளாக வந்திருந்து, இருள் சூழ்ந்திருந்த தங்கள் வாழ்க்கையில் ஒளி காட்டி வழி காட்

டிய ஜோதியை நினைந்து நினைந்து கண்ணீர் சொரிந்து இருகரமும் சிரமேற் குவித்துத் தொழுதார்கள்.

இராமபிரான் அயோத்தியை விட்டுக் கானகத்துக்குப் புறப்பட்டபோது அயோத்தியில் உள்ள மக்கள் எல்லாரும் கூடப் புறப்பட்டார்கள். "சுவரிலே உள்ள சித்திரங்கள் மட்டுந்தான் கூடப் புறப்படவில்லை. அவையும் புறப்படாததற்குக் காரணம் அவற்றுக்கு உயிர் இல்லாமைதான்!" என்று கவிஞர் வர்ணித்திருக்கிறார்.

ஏறக்குறைய அதே நிலைமை இந்திய நாடெங்கும் ஏற்பட்டதை இந்த மாதம் 12உ யன்று பார்த்தோம்.

காந்தி மகானிடம் தங்களுக்குள்ள பக்தியையும், அவருடைய பிரிவினால் தங்களுக்கு ஏற்பட்ட துயரத்தையும் ஏதேனும் ஒரு விதத்தில் அன்று காட்டிக்கொள்ளாதவர் யாரும் இல்லை. எல்லா வகுப்பாரும் எல்லாச் சமூகத்தாரும் முதியோரும் சிறியோரும் ஆண்களும் பெண்களும் அனைவரும் அழுதார்கள்; தொழுதார்கள்.

மகாத்மாவின் அஸ்தித் துகள் கரைப்பதற்கு வராத இடங்களிலே ஜனங்கள் கோயில்களிலும் கூட்டங்களிலும் பிரார்த்தனை செய்தார்கள்.

அஸ்திக் கலசத்தை ஏந்திச் சென்ற ரயில் போன வழியெல்லாம் ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் மக்கள் நின்று வணங்கினார்கள்.

*　　　*　　　*

மகாத்மா பூத உடலில் இருந்தபோது அவருடைய கழுத்தில் ஒரு பூமாலை யாரும் சூட்டியது கிடையாது. மாலைகளை மகாத்மா விரும்பாத காரணத்தினால்தான்.

ஆனால் மகாத்மாவின் அஸ்தித் துகளை ஏந்திய கலசங்களின் மீது 'டன்' கணக்கிலே அன்று புஷ்பங்கள் பொழியப்பட்டன! ஆயிரக் கணக்கான பூமாலைகள் சூட்டப்பட்டன.

ஆகாச விமானங்களிலிருந்து பலவர்ண மலர்களைச் சொரிந்து ஆற்று நீர் வெள்ளத்தைப் பூ வெள்ளமெனத் தோன்றும்படி செய்தார்கள்!

*　　　*　　　*

காந்தி மகாத்மா இந்த உலகில் வாழ்ந்திருந்த காலத்தில் மிகப் பெரும் பகுதியை அரசாங்கத்துடன் போராடுவதிலேயே கழித்து வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அவர் பலமுறை கைது செய்யப்பட்டார்; பல வருஷம் சிறையில் இருந்தார்.

காந்தி மகானுடைய அஸ்தி கலச ஊர்வலங்களின்போது முன்னும் பின்னும் பிரபல தலைவர்களோடு பெரிய பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மரியாதை செலுத்திக் கொண்டு சென்றார்கள். காங்கிரஸ் தொண்டர் குழாத்தோடு அரசாங்க ராணுவ வீரர்களும் அணிவகுத்துச் சென்றார்கள். பொது மக்களோடு போலீஸாரும் வணக்கம் செலுத்திக் கொண்டு சென்றார்கள்.

கவர்னர் ஜெனரலும் கவர்னர்களும் மரியாதை செய்தார்கள். ராணுவ தளபதிகளும் ஹைகோர்ட் ஜட்ஜுகளும் வணக்கம் செலுத்தினார்கள். பிரதம மந்திரிகளும் மற்ற மந்திரிகளும் பற்பல அரசாங்க இலாகாத் தலைவர்களும் கைகூப்பி நின்றார்கள்.

ஆகா! இது என்ன மாறுதல்! இது என்ன அற்புதம்!

உலகத்தையெல்லாம் 'ஒரு குடை'யில் ஆண்ட எந்த மகா சக்கரவர்த்திக்கும் எந்த மன்னாதி மன்னருக்கும் எந்த அவதார புருஷருக்கும் எந்தக் குடியரசின் தலைவருக்கும் அவர்கள் இறந்த பிறகு இந்த மாதிரி மரியாதைகள் நடந்ததில்லையே!

இராமரை நினைக்குங்கால் இராவணன் நினைவும் வருவது போல், மகாத்மாவுக்கு நடந்த அந்திய மரியாதைகளை நினைக்கும்போது ஹிட்லர்-முஸோலினி இவர்களுடைய நினைவும் வந்து தொலைகின்றது!

ஆகா! ஹிட்லரும் முஸோலினியும் எத்தகைய பயங்கர முடிவை அடைந்தார்கள்! மரணத்திற்குப் பிறகு எப்படி அவமரியாதை செய்யப் பட்டார்கள்! எப்படித் தூற்றப்பட்டார்கள்!

அவர்களுடைய கேவலமான முடிவோடு மகாத்மாவின் மகோந்நதமான முடிவை ஒப்பிட்டால் ......?

ஹிம்சைக்கும் அஹிம்சைக்கும் உள்ள வேற்றுமையைக் காண்கிறோம். துவேஷத்துக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்கிறோம்.

மகாத்மா காந்தியும் தாம் உயிர் வாழ்ந்தபோது பிரிட்டிஷாருடன் தீவிரமாகப் போராடினார்.

பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் யுத்தத்தின்போது மகாத்மாவைத் தங்கள் எதிரி என்றே கருதினார்கள்.

ஆனால் இந்தப் பிப்ரவரி 12உ லண்டனிலும் அமெரிக்காவிலும் மகாத்மாவின் நினைவுக்கு மரியாதை செய்யப்பட்டது. பிரஸிடெண்டு ட்ரூமன் வாஷிங்டனில் நடந்த கூட்டத்திற்கு வந்திருந்தார். சம்பிரதாயப்படி தாம் பேசியவுடன் எழுந்து போய்விடாமல் கூட்டம் முடியும் வரையில் இருந்து மகாத்மாவுக்கு மரியாதை செய்தார்.

இதோ அஹிம்சையின் சக்தியையும் அன்பின் வலிமையையும் நேருக்கு நேர் கண்டோம். காந்தி மகான் இறந்த பன்னிரண்டு நாளைக்குள் இவ்வளவு சந்தேகத்துக்கும் இடமில்லாத முறையிலே கண்டோம்.

அன்பும் அஹிம்சையும் அகில உலகத்தையும் சகல புவனத்தையும் வெற்றி கொண்டு ஆளும் சக்தியுடையவை என்பதைக் கண்டோம்.

இன்னமும் அன்பைக் கைக்கொள்ளாமல் பகைமையைக் கைக்கொள்ளும் அறியாமை நம்மிடையே இருக்கலாமா? அஹிம்சையைக் கைவிட்டுப் பலாத்காரத்தை மேற்கொள்ளும் மடமை இருக்கலாமா?

காந்தி மகான் பிறந்த நாட்டில் இருக்கலாமா? காந்தி மகான் இறந்த நாட்டில் இருக்கலாமா?

மன்னியுங்கள்! "காந்தி மகான் இறந்தார்!" என்று எழுதியதற்காகத் தயவு செய்து மன்னியுங்கள்.

காந்தி மகான் இறக்கவில்லை! சத்தியமும் சாகவில்லை!

காந்தி அமரரானார்! சிரஞ்சீவி ஆனார்!

காந்தி நீரிலே கரைந்தார்! மறு கணம் வானிலே எழுந்தார்!

"அநாதைகள் ஆனோமே!" என்று தவித்த கோடானுகோடி இந்திய மக்களுக்கு அபயம் அளித்தார்.

"நான் இறக்கவில்லை; இதோ இருக்கிறேன்! காப்பாற்றுகிறேன்!" என்று உறுதி அளித்தார்.

"இதுவரை ஓர் உடலிலே இருந்தேன்; இனி உங்கள் எல்லாருடைய இதயத்திலும் இருப்பேன்!" என்று அருள் புரிந்தார்.

இதையெல்லாம் அந்தப் புண்ணிய தினத்தில், பிப்ரவரி 12உ யன்று, கோடிக் கணக்கான இந்திய மக்கள் தங்கள் உள்ளத்திலுள்ளே அறிந்தார்கள். நீரிலே கரைந்த காந்திஜி தங்கள் நெஞ்சிலே கோயில் கொண்டு உறைவதை உணர்ந்தார்கள்.

வாழ்க காந்தி மகான்! வாழ்க அவர் குடிகொண்ட கோயில்கள்!

காந்தி அஞ்சலி — 6

மன்னுயிர் காக்கும் புண்ணியர்

பிரபல அமெரிக்கப் பத்திரிகையாகிய "நியூயார்க் டைம்ஸ்" காந்திஜியின் மரணத்தைப் பற்றி எழுதியிருக்கும் ஒரு நீண்ட தலையங்கத்தில் கடைசியாகக் கூறுவதாவது:—

மோஹன்தாஸ் கரம் சந்திர காந்தியின் மெலிந்த தேகத்தைத் தகனம் செய்வதற்காகப் புது டில்லியில் உள்ள பிர்லா மாளிகையிலிருந்து புனிதமான யமுனா நதி தீரத்துக்கு எடுத்துப் போகும் இன்றைய தினம், உலக முழுவதும் சோக மௌனம் குடிகொண்டிருக்கிறது.

புனாவிலிருந்து வந்த அந்த ஹிந்து இளைஞன், பிர்லா மாளிகைக்குப் பக்கத்திலேயுள்ள பிரார்த்தனை மண்டபத்துக்குப் போகும் பாதையில் மறைந்திருப்பதாக காந்திஜிக்கு நன்றாகத் தெரிந்திருந்தாலுங் கூட, தம்முடைய மரணத்தின் மூலம் இந்தியாவையோ அல்லது இந்தியாவில் உள்ள வேறு யாராவது ஒருவருடைய உயிரையோ காப்பாற்ற முடியும் என்று நினைத்திருந்தால், அவர் சந்தோஷமாக அந்தப் பலிக்கு உடன்பட்டிருப்பார். இதில் நமக்குக் கொஞ்சங்கூடச் சந்தேகம் இல்லை.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்



ரா. கி.

6. கடல் பிரயாணம்

மோகன்தாவின் பதினாறுவது பிராயத்தில் அவருடைய அருமைத் தந்தையார் காலமானார். காலமாவதற்கு முன்பு நீண்ட காலம் அவர் படுத்த படுக்கையாகவே இருக்கும்படி நேர்ந்தது. அப்போதெல்லாம் மோகன்தாஸ் பள்ளிக்கூடம் போன நேரம் போக மிச்ச நேரமெல்லாம் தந்தைக்குப் பணிவிடை செய்வதிலேயே கழித்தார். தினமும் இரவில் தந்தைக்குக் கால் பிடித்து விடுவார். தந்தை தூங்கியபிறகோ அல்லது அவர் போகச் சொன்ன பிற்பாடோதான் தூங்கச் செல்வார்.

தந்தை இறந்த அன்று இரவு பதினொரு மணி வரையில் மோகன்தாஸ் அவருக்குக் கால் பிடித்து விட்டுக்கொண்டிருந்தார். பிறகு அவருடைய சிறிய தகப்பனார் தாம் தந்தைக்குப் பணிவிடை செய்வதாகச் சொல்லி மோகன்தாஸைப் படுக்கப் போகும்படி சொன்னார். அவ்விதமே மோகன்தாஸ் சென்றார். ஆனால் படுத்த சில நிமிஷத்துக்கெல்லாம் வேலைக்காரன் ஓடி வந்து கதவைத் தட்டி, "அப்பாவுக்கு உடம்பு அதிகமாயிருக்கிறது; சீக்கிரம் வாருங்கள்!" என்றான். மோகன்தாஸ் தந்தையிடம் போவதற்குள் அவருடைய உயிர் பிரிந்து விட்டது. மரணத் தறுவாயில் தந்தையின் பக்கத்தில் தாம் இருக்கவில்லையே என்று காந்திஜியின் மனதில் குடிகொண்ட வருத்தம் என்றைக்கும் நீங்கவில்லை.

• • •

தந்தை இறந்த இரண்டு வருஷத்துக்கெல்லாம் மோகன்தாஸ் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பிறகு கலாசாலையில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று வீட்டுப் பெரியவர்கள் விரும்பினார்கள். பவநகரில் இருந்த ஸமால்தாஸ் கலாசாலைக்குச் சென்று அதில் சேர்ந்தார். ஆனால் அங்கே அவருக்குத் திக்குத் திசை தெரியவில்லை. ஆசிரியர்களின் உபந்யாசங்கள் அர்த்தமாகவே யில்லை. முதல் ஆறு மாதம் எப்படியோ கழித்து விட்டு விடுமுறைக்கு வீடு வந்து சேர்ந்தார்.

காந்தி குடும்பத்தாரின் பழைய நண்பர் மாவ்ஜி தவே என்னும் பிராமணர். அவர் சிறந்த அறிவாளி. மோகன்தாஸ் விடுமுறைக்கு வந்திருந்தபோது மாவ்ஜி தவே ஒரு சமயம் அவருடைய வீட்டுக்கு வந்தார். குடும்ப யோக க்ஷேமங்களை விசாரிக்கையில், மோகன்தாஸ் ஸமால்தாஸ் கலாசாலையில் சேர்ந்து படிப்பதைப் பற்றி அறிந்தார். பிறகு அவர் குடும்பத்தின் நன்மையை முன்னிட்டுப் பின்வருமாறு கூறினார்:—

"காலம் இப்போது மாறிவிட்டது. தக்க படிப்பும் பட்டமும் இல்லாமல் உங்கள் தந்தையைப்போல் பெரிய உத்தியோகத்துக்கு நீங்கள் ஒருவரும் வர முடியாது. குடும்பத்தில் இந்தப் பிள்ளை ஒருவன்தான் படிக்கிறான். ஆனால் இவன் கலாசாலையில் படித்து பி. ஏ. பரீட்சை தேறுவதென்றால் அதற்கு நாலு வருஷம் ஆகும். அப்போதும் மாதம் ஐம்பது அறுபது ரூபாய் சம்பளத்துக்குத்தான் தகுதியாவான். பிறகு சட்டம் படிப்பதென்றால் இன்னும் இரண்டு வருஷம் ஆகும். இப்போதே இவனை இங்கிலாந்துக்கு அனுப்பினால் மூன்றே வருஷத்தில் பாரிஸ்டர் பட்டத்துடன் திரும்பி வரலாம். பாரிஸ்டர் ஆவது மிகவும் சுலபம் என்று கேள்வி. பாரிஸ்டர் ஆகி விட்டால், வக்கீல் தொழில் நடத்தினாலும்

நடத்தலாம். இவான் முதலிய பெரிய உத்தியோகத்துக்கும் வரலாம். கால தாமதம் செய்ய வேண்டாம். இந்த வருஷமே இவனை இங்கிலாந்துக்கு அனுப்புங்கள்."

மாவ்ஜி தவேயைக் காந்தி குடும்பத்தார் 'ஜோஷிஜி' என்று அழைப்பது வழக்கம். ஜோஷிஜி சொன்ன காரியம் மோகன் தாஸுக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தது. எப்படியாவது கலாசாலையை விட்டால் போதுமென்று அவருக்கு இருந்தது.

ஆனால் மோகன் தாஸின் சகோதரரும் தாயாரும் பெரிதும் கலக்கத்துக்கு உள்ளானார்கள். சகோதரருக்குப் பணத்தைப் பற்றிக் கவலை. அதோடு இவ்வளவு இளம் வயதுச் சிறுவனைத் தனியாக வெளி நாட்டுக்கு அனுப்பலாமா என்று கவலை.

தாயாருக்கோ தன்னுடைய கடைக் குட்டிப் புதல்வனைப் பிரியவே மனம் இல்லை. "நம்முடைய குடும்பத்தில் இப்போது பெரியவர் உன்னுடைய சித்தப்பாதான். அவரைப் பார்த்து யோசனை கேள்!" என்று தாயார் கூறினார்.

மோகன் தாஸின் குடும்பம் அப்போது இராஜகோட்டையில் இருந்தது. சிறிய தந்தையோ போர்பந்தர் சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்தார்.

"சித்தப்பாவைப் பார்த்துப் பேசிவிட்டு அப்படியே போர்பந்தர் நிர்வாக அதிகாரியான மிஸ்டர் லெலியையும் பார். சமஸ்தானத்திலிருந்து உன்னுடைய படிப்புக்கு ஏதாவது உதவி கிடைக்கலாம்!" என்று சகோதரர் சொன்னார்.

இங்கிலாந்துக்குப் போக வேண்டும் என்று மோகன் தாஸுக்கு ஒரே ஆத்திரமாயிருந்தது. ஆகவே, மூன்று நாள் கட்டை வண்டியிலும் ஒரு நாள் ஒட்டகத்தின் மேலும் பிரயாணம் செய்து போர்பந்தரை அடைந்தார்.

ஆனால் போன காரியம் கைகூடவில்லை. "உனக்கு அனுமதி நான் தர முடியாது, உன் தாயார் சம்மதித்தால் சுகமாகப் போய் வா! என் ஆசி உனக்கு எப்போதும் உண்டு!" என்று சித்தப்பா கூறினார்.

மிஸ்டர் லெலிக்கு அவர் சிபார்சுக் கடிதம் கொடுக்கவும் மறுத்துவிட்டார். "நீயாகவே போய்ப் பார். உன்னுடைய உறவு முறையைச் சொல்லிக் கொள்!" என்றார்.

அவ்விதமே மோகன் தாஸ் துரையைப் பார்க்கச் சென்றார். "முதலில் பி. ஏ. பரீட்சையில் தேறிவிட்டு அப்புறம் என்னை வந்து பார்!" என்று ஒரே வாக்கியத்தில் சொல்லி அனுப்பிவிட்டார் லெலி துரை.

வெறுங்கையுடன் மோகன் தாஸ் இராஜ கோட்டைக்குத் திரும்பினார். ஜோஷிஜி மறுபடியும் வந்தார். "பாரிஸ்டர் படிப்புக்காகக் கடன் பட்டாலும் பாதகமில்லை!" என்று வற்புறுத்தினார். மோகன் தாஸ் தமது மனைவியின் நகைகளை விற்று விடலாம் என்றார். சகோதரர், "அது கூடாது. நான் எப்படியாவது பணம் தேடிக் கொடுக்கிறேன்!" என்று சொன்னார்.

ஆனால் தாயார் மட்டும் மனம் இணங்கி அனுமதி கொடுக்கும் வழியாக இல்லை. இங்கிலாந்துக்குப் போகும் இளைஞர்கள் பல வழிகளிலும் கெட்டுப் போகிறார்கள் என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். இதைப்பற்றி மோகன் தாஸிடம் சொன்ன போது, அவர், "அம்மா! என்னை நம்ப மாட்டீர்களா? நீங்கள் செய்ய வேண்டாம் என்று சொல்லும் காரியங்களை நான் செய்ய மாட்டேன்!" என்றார்.

பெசார்ஜி ஸ்வாமி என்னும் ஜைன பிக்ஷு ஜோஷிஜியைப் போலவே காந்தி குடும்பத்தாருக்கு மிகவும் வேண்டியவர். அவரிடம் சென்று மோகன் தாஸின் அன்னை யோசனை கேட்டார்.

பெசார்ஜி ஸ்வாமியார் மோகன் தாஸை வரவழைத்தார். அன்னையையும் கூட வைத்துக் கொண்டு அவரிடம் மூன்று பிரதிக்ஞைகள் வாங்கிக் கொண்டார்.

"மதுபானம் செய்வதில்லை; மாமிச உணவு சாப்பிடுவதில்லை; சிற்றின்பத்தில் ஈடுபடுவதில்லை" என்பவைதான் அந்த மூன்று பிரதிக்ஞைகள்.

இவ்விதம் புதல்வர் பிரதிக்ஞை செய்து கொடுத்த பிறகு அன்னையின் உள்ளம் தைரியம் அடைந்தது. மோகன் தாஸ் இங்கிலாந்து செல்ல அனுமதி கிடைத்தது.

மோகன் தாஸ் தம் இளம் மனைவியையும் சின்னஞ்சிறு குழந்தையையும் பிரிந்து பம்பாய்க்குப் பிரயாணமானார். சகோதரரும் அவரைக் கப்பலில் ஏற்றுவதற்காகக் கூடச் சென்றார். அவர்கள் பம்பாய் சேர்ந்த சமயம் ஜூன் மாதம். ஜூன், ஜூலை மாதங்களில் கடலில் கொந்தளிப்பு அதிகமிருக்குமென்றும், சமீபத்திலேதான் ஒரு கப்பல் மூழ்கிவிட்டதென்றும் சில நண்பர்கள் தெரிவித்தார்கள். மோகன் தாஸின் சகோதரருக்கு மிக்க கவலை ஏற்பட்டது. எனவே, ஒரு நண்பரின் வீட்டில் மோகன் தாஸ் சில மாதம் இருந்து

விட்டு அப்புறம் பிரயாணப்படலாமென்று தீர்மானமாயிற்று. பிரயாணச் செலவுக்கான பணத்தை இன்னொரு உறவினரிடம் கொடுத்துவிட்டு மோகன்தாஸின் தமையனார் இராஜகோட்டைக்குத் திரும்பினார்.

இதற்குள்ளே பம்பாயிலுள்ள பனியா சாதியாரிடையே இந்தச் செய்தி பரவியது. பனியா வகுப்பில் அது வரையில் யாரும் கப்பல் ஏறியதில்லை. எனவே, சாதிக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. மோகன்தாஸை இந்தக் கூட்டத்துக்கு அழைத்து விசாரணை செய்தார்கள். மோகன்தாஸ் சிறிதேனும் அஞ்சாமலும் தயங்காமலும் தாம் இங்கிலாந்து போகப்போவது பற்றிச் சொன்னார். சாதித் தலைவர், "கடற் பிரயாணம் செய்வது நம் மதத்துக்கு விரோதம். அங்கே மது மாமிசம் சாப்பிட நேரிடும். போகக்கூடாது!" என்றார்.

"என் தாயாரிடம் நான் பிரதிக்ஞை செய்து கொடுத்திருக்கிறேன். மத விரோதம் செய்யாமல் என்னால் இங்கிலாந்தில் இருக்க முடியும்!" என்றார் மோகன்தாஸ்.

சாதித் தலைவரும் சாதிக் கூட்டமும் அதை ஒப்புக் கொள்ளவில்லை.

"இந்த வாலிபன் பிடிவாதக்காரன். இவனைச் சாதிப்பிரஷ்டம் செய்திருக்கிறோம். இவனுக்கு உதவி செய்வோருக்கு அபராதம் விதிக்கப்படும்" என்று சாதிக் கூட்டத்தின் கட்டளை பிறந்தது.

இதனால் மோகன்தாஸ் மனங் கலங்கி விடவில்லை. ஆனால் இங்கிலாந்துக்குப் புறப்படுவதில் அவருக்கு ஆத்திரம் அதிகமாயிற்று. இதைத் தம் சகோதரர் கேள்விப் பட்டால் என்ன செய்வாரோ, என்னமோ? ஆகையால் உடனே புறப்பட்டுவிட விரும்பினார். தமையனார் யாரிடம் பிரயாணச் செலவுக்குப் பணம் கொடுத்து விட்டுச் சென்றாரோ அவரிடம் போய்க் கேட்டார். அந்த உறவினர் பணம் கொடுக்க மறுத்து விட்டார். கொடுத்தால் தாம் சாதிப் பிரஷ்டத்துக்கு உள்ளாக நேரிடும் என்றும், அதற்குத் தாம் தயாராயில்லை யென்றும் சொல்லி விட்டார்.

பிறகு மோகன்தாஸ் பம்பாயி லிருந்த இன்னொரு குடும்ப நண்பரைத் தேடிப் பிடித்து விஷயத்தைச் சொன்னார். கப்பல் செலவுக்குப் பணம் கடனாகக் கொடுக்கும்படியும் தமையனாரிடம் அதை வாங்கிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டார். அவர் அதற்கு இணங்கிப் பணங் கொடுத்ததுடன் மோகன்தாஸை உற்சாகப் படுத்தினார். அவர் செய்த இந்தக் காரியம் இந்தியாவும் உலகமும் செய்த புண்ணியத்தினால்தான் என்று சொல்ல வேண்டும். அந்தக் குடும்ப நண்பரை வாழ்த்துவோமாக.

உடனே மோகன்தாஸ் இங்கிலாந்து வாழ்க்கைக்குரிய உடைகளைத் தயாரித்துக் கொண்டார். குறிப்பிட்ட தினத்தில் கப்பல் ஏறினார். அதே கப்பலில் ஜூனாகாத் வக்கீலான ஸ்ரீ திரியம்பக ராய் மஜூம்தார் என்பவர் பிரயாணம் செய்தார். மஜூம்தாரின் அறையிலேயே மோகன்தாஸும் பிரயாணம் செய்யும்படி நண்பர்கள் ஏற்பாடு செய்தார்கள். மோகன்தாஸைக் கவனித்துக்கொள்ளும்படியும் மஜூம்தாரைக் கேட்டுக் கொண்டார்கள். செப்டம்பர் 4-ந் தேதி பம்பாயிலிருந்து கப்பல் புறப்பட்டது.

7. லண்டன் வாழ்க்கை

கப்பலில் சென்றபோது மோகன்தாஸ் தமது அறையை விட்டு அதிகம் வெளிக் கிளம்புவதில்லை. கப்பலில் கொடுத்த உணவையும் அருந்துவதில்லை. பம்பாயிலிருந்து கொண்டு வந்திருந்த மிட்டாய்களையும் பழங்களையுமே சாப்பிட்டு வந்தார்.

கப்பலில் இருந்த மற்றப் பிரயாணிகள் எல்லாரும் ஆங்கிலேயர்கள். அவர்களுடன் கலந்து பழகும்படி மஜூம்தார் உபதேசித்தது ஒன்றும் பயன்படவில்லை. மோகன்தாஸ் இளம் பிராயத்தில் பெரிய சங்கோஜி. அதோடு ஆங்கிலேயர் பேசுகிற ஆங்கில பாஷையை மோகன்தாஸினால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எனினும், ஆங்கிலப் பிரயாணி ஒருவர் மோகன்தாஸிடம் எப்படியோ அபிமானம் கொண்டு அவரைப் பேச்சுக்கு இழுத்தார். செங்கடலைத் தாண்டிய பிற்பாடு அந்த ஆங்கிலேயர் மோகன்தாஸுக்கு, "இனி மாமிச போஜனம் செய்யாமல் சரிப்பட்டு வராது!" என்று போதிக்கத் தொடங்கினார். "இங்கிலாந்து குளிர் மிகுந்த தேசம். அங்கே இந்த விரதமெல்லாம் அனுஷ்டிக்க முடியாது!" என்று எச்சரித்தார்.

எனினும் மோகன்தாஸின் உள்ளம் சிறிதும் சலிக்கவில்லை. அன்னைக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி வந்தார்.

ஸௌதாம்டன் துறைமுகத்தில் இறங்கி லண்டனுக்குச் சென்றதும் விக்டோரியா ஹோட்டலில் தங்கினார். அங்கே கொடுத்த உணவை அவரால் சாப்பிட முடியவில்லை. செலவு மட்டும் ஏராளமாயிற்று.



இங்கிலாந்தில் மோகன்தாஸ்

லண்டனில் நாலு பேருக்கு மோகன்தாஸ் கடிதம் கொண்டு வந்திருந்தார். அவர்கள் டாக்டர் பி. ஜெ. மேத்தா, ஸ்ரீ தளபதிராம் சுக்லா, ராஜா ரஞ்சித்சிங், ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி ஆகியவர்கள்.

இவர்களில் டாக்டர் மேத்தா என்பவர் மோகன்தாஸை விக்டோரியா ஹோட்டலில் சந்தித்து, "ஹோட்டல் வாசம் உனக்குச் சரிப்பட்டு வராது. ஏதாவது ஓர் ஆங்கிலக் குடும்பத்தில் பணம் கொடுத்துச் சாப்பிடுவதுதான் சௌகரியம். அதற்கு நான் ஏற்பாடு செய்யும் வரையில் என் நண்பர் ஒருவரோடு இரு!" என்று சொன்னார்.

அந்த நண்பரும் மோகன்தாஸுக்கு மாமிசம் சாப்பிடும்படி உபதேசிக்கத் தொடங்கினார். "எழுத்து வாசனை அறியாத தாயாரிடம் செய்து கொடுத்த பிரதிக்ஞையை ஏன் கட்டிக்கொண்டு அழுகிறாய்?" என்று கேட்டார்.

இருந்தும் மோகன்தாஸின் மன உறுதி சிறிதும் தளரவில்லை.

பின்னர், ஆங்கிலக் குடும்பம் ஒன்றில் அவர் வசிப்பதற்கு டாக்டர் மேத்தாவும் ஸ்ரீ சுக்லாவும் ஏற்பாடு செய்தார்கள்.

அந்தக் குடும்பத்தின் தலைவியான மூதாட்டி மோகன்தாஸை மிக்க அன்போடு நடத்தினார். ஆயினும், இங்கேயும் உணவு சரிப்பட்டு வரவில்லை. அவர்கள் கொடுத்த இரண்டு ரொட்டித் துண்டுகள் மோகன்தாஸுக்குப் போதவில்லை. அதிகம் கேட்கவும் சங்கோசமாயிருந்தது.

நல்ல வேளையாக இதற்குள் மோகன்தாஸுக்குக் கால் முளைத்திருந்தது! அதாவது லண்டன் நகரில் அங்குமிங்கும் சுற்ற ஆரம்பித்திருந்தார். சைவ போஜன சாலை ஒன்று அவருடைய கண்ணில் பட்டது. அதற்குள் நுழைந்தார். "மரக்கறி உணவின் மகிமை" என்ற பெயருடன் ஆசிரியர் ஸால்ட் எழுதிய புத்தகம் ஒன்றும் அந்த ஹோட்டலில் விற்றார்கள். மோகன்தாஸ் அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டுபோய்ப் படித்தார். அதன் பலனாகச் சைவ உணவில் மோகன்தாஸுக்குப் பற்றுதலும் நம்பிக்கையும் உண்டாயின. அன்னைக்குக் கொடுத்த வாக்குறுதிக்காக மட்டுமில்லாமல் தம்முடைய சொந்த இஷ்டத்தின் பேரிலேயே சைவ உணவு விரதத்தில் உறுதி கொண்டார். உணவு பற்றிய இன்னும் பல புத்தகங்கள் படித்து ஆராய்ச்சிகளும் நடத்தத் தொடங்கினார்.

லண்டனுக்குப் போன புதிதில் மோகன்தாஸ் ஆங்கிலேய கனவான்களைப் போல் தோரணையாக வாழ்க்கை நடத்த முயன்றார். நவநாகரிக உடுப்புகள் தைத்துக் கொண்டார். நிலைக் கண்ணாடியின் முன்னால் நின்று தலையை ஜோராக வாரிக் கொள்வதில் தினம் பத்து நிமிஷம் சென்றது. பிறகு ஆங்கில நடனம் கற்றுக் கொள்ள முயன்றார். நடனப் பயிற்சிக்குத் தாளஞானம் அவசியமாயிருந்தது. இதற்காக ஆங்கில சங்கீதம் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். ஒரு வயலினும் வாங்கினார். இதெல்லாம் சொற்ப காலந்தான் நீடித்திருந்தது. ஆங்கில நாகரிக மோகம் மூன்று மாதத்திற்குள்ளே மோகன்தாஸை விட்டுச் சென்றது.

"இங்கிலாந்தில் நாம் எப்போதும் வசிக்கப்போகிறோமா? பாரிஸ்டர் படிப்பு முடிந்ததும் தாய்நாடு திரும்ப வேண்டியதுதானே? இந்த அயல் நாட்டு நாகரிகம் எல்லாம் நமக்கு என்னத்திற்கு?" என்று எண்ணினார். "நம்முடைய ஒழுக்கத்தினால் நாம் கனவானாக வேண்டுமே தவிர இத்தகைய வெளி வேஷங்களினால் கனவா

ளுவதில் என்ன பயன்?" என்றும் சிந்தனை செய்தார். இத்தனை நாளும் தாம் கொண்டிருந்தது பொய்யான வாழ்க்கை இலட்சியம் என்று தெரிந்து ஆங்கில நாகரிக ஆசையை விட்டுத் தொலைத்தார்.

* * *

தம்பி! இதற்கு முந்தைய இதழில் காந்திஜியின் சிறு பிராயத்துக் குறைபாடுகள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன். மேலேயும் குறிப்பிட்டிருக்கிறேன்.

"இப்பேர்ப்பட்ட மகானுடைய சரித்திரத்தில் இம்மாதிரி சிறு குறைகளையெல்லாம் ஏன் சொல்லவேண்டும்?" என்று நீ கருதலாம். அல்லது, "இந்த மாதிரி குறைகள் இருந்தவர் எப்படி மகாத்மா ஆனார்?" என்று ஆச்சரியப்படலாம்.

இதையெல்லாம் பற்றி மகாத்மா தமது சுய சரிதத்தில் தாமே எழுதியிருக்கிறார் என்பதை நீ ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இம்மாதிரி சுயசரிதம் எழுதும் பிரமுகர்கள் சாதாரணமாகத் தங்களுடைய குறைகளைத் தாங்கள் சொல்ல மாட்டார்கள். தங்களுடைய பெருமையை உயர்த்தக்கூடிய முறையிலேயே சுயசரிதம் எழுதுவார்கள். தங்களுடைய குறைகளைக் கூடக் குணங்களைப் போல் மாற்றி மெருகு கொடுத்து எழுதுவார்கள்.

இதிலேதான் காந்திஜிக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண வேண்டும். காந்திஜி உள்ளது உள்ளபடி தம்மிடமிருந்த குறைபாடுகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். இதுமட்டுமல்ல; இந்தியாவின் மாபெரும் தலைவராகி, "மகாத்மா" என்று மக்கள் போற்றத் தொடங்கிய பிற்பாடுகூட, தாம் செய்த 'தவறு'களை வெளிப்படையாக எடுத்துச் சொல்வது அவர் வழக்கம். 1922-ம் ஆண்டில் ஒரு சமயம் "இமாலயத் தவறு செய்துவிட்டேன்" என்று மகாத்மா காந்தி கூறியது பலராலும் பல தடவை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

உண்மையில், இத்தகைய சத்தியப் பற்றினாலேதான் காந்திஜி உலகம் போற்றும் மகா புருஷர் ஆனார்.

காந்திஜியின் இளம்பிராயக் குறைகளைப் படித்துத் தெரிந்துகொண்டதிலிருந்து நீ இன்னொரு விஷயம் அறியவேண்டும். மகாத்மா பிறக்கும்போதே மகாத்மாவாகப் பிறக்கவில்லை. சிறு பிராயத்தில் உன்னையும் என்னையும் போலவே பல குறைகள் உள்ள சாதாரணச் சிறுவராகவே இருந்தார். ஆயினும் சத்தியத்தின் உறுதியினாலும் மனதின் திட சங்கல்பத்தினாலும் இடைவிடாத பிரயாசையினாலும் அந்தக் குறைகளையெல்லாம் போக்கிக்கொண்டு மகாத்மா ஆனார். இது நமக்கெல்லாம் நம்பிக்கை தரவேண்டிய விஷயம். நம்மிடம் உள்ள குறைகளையும் நாம் பிரயாசைப்பட்டுப் போக்கிக் கொள்ளலாம். மகாத்மாவைப் போல் எல்லாரும் அவ்வளவு மகிமையடைய முடியாதுதான். மகாத்மாவைப் போன்ற மகா புருஷர் ஒருவர் உலகத்தை உத்தாரணம் செய்வதற்கு இரண்டாயிரம் வருஷத்துக்கொரு முறையே தோன்றக்கூடும். ஆயினும் பிரயாசைப்பட்டு நம்மை நாம் உயர்த்திக் கொள்ளலாம். நம்முடைய மனச்சாட்சியை நாம் திருப்தி செய்துகொள்ளலாம். "குறைகளைப் போக்கிக்கொள்ள நம்மால் முடியாது!" என்று நிராசையடைந்து மேலும் மேலும் படுகுழியில் இறங்கி முழுகிப் போய்விட வேண்டியதில்லை. நம்முடைய குறைகளுடன் நாம் போராடி வெற்றி கொள்ளலாம்.

இதற்காகத்தான் மகாத்மாவின் சிறு பிராயத்துக் குறைகளை விட்டுவிடாமல் நான் குறிப்பிட்டேன். முன் அத்தியாயங்களைப் படித்த உன் தாயார், "இதெல்லாம் குழந்தைக்கு எதற்காகச் சொல்கிறீர்கள்? இதனால் நன்மை என்ன?" என்று கேட்டாள். "உண்மையே வடிவான ஒருவரைப்பற்றி எழுதும்போது உண்மையைத் தானே எழுத வேண்டும்? அதனால் நிச்சயமாக நன்மையே விளையும்!" என்று நான் மறுமொழி சொன்னேன். நீ என்ன நினைக்கிறாய், தம்பி!

சந்தோஷம். என்னுடன் ஒத்தே நீயும் அபிப்பிராயப் படுகிறாயல்லவா? அப்படியானால் மோகன் தாஸின் இங்கிலாந்து வாழ்க்கையில் இன்னொரு சம்பவத்தையும் சொல்லி வைக்கிறேன்.

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்ற மாணவர்கள் கலியாணமானவர்களாயிருந்தாலும் பிரம்மசாரிகளைப்போல் நடிப்பது வழக்கமாம். இப்படி நடிப்பதினால் ஆங்கிலக் குடும்பங்களில் உள்ள கலியாணமாகாத பெண்களுடன் அவர்கள் சல்லாபம் செய்வது சாத்தியமாயிருந்தது. ஆங்கிலேயரில் பலர் விசால நோக்கம் படைத்தவர்கள். தங்கள் பெண்கள் இந்திய இளைஞர்கள்மேல் காதல் கொண்டால் அவர்

களைக் கலியாணம் செய்து கொள்வதற்குப் பெற்றோர் ஆட்சேபிப்பதில்லை. இதை அறிந்து பல இந்திய இளைஞர்கள் பிரம்மச்சாரிகளைப்போல் நடித்துப் பொய் வாழ்க்கை நடத்தினார்கள்.

மோகன்தாஸும் இங்கிலாந்தில் வசித்த போது சில காலம் இத்தகைய பொய் வாழ்க்கை நடத்தினார். ஆங்கில சமூகத்தில் சாதாரணமாக இளமை மணம் கிடையாது. ஆகையால், பத்தொன்பது வயதேயான மோகன்தாஸுக்கு 'நான் கலியாணம் ஆனவன்' என்று சொல்லிக்கொள்ள மிகவும் சங்கோசமாயிருந்தது.

ஓர் ஆங்கில மூதாட்டி மோகன்தாஸின் பேரில் அபிமானம் கொண்டார். தம்முடைய வீட்டுக்கு அவரை அடிக்கடி அழைத்தார். அந்த வீட்டிலிருந்த கலியாணமாகாத பெண்கள் மோகன்தாஸிடம் கூச்சமின்றிச் சிநேக முறையில் பழகினார்கள்.

ஆனால் ஒரு பெண் விஷயத்தில் மோகன்தாஸுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவளைத் தமக்குக் கலியாணம் செய்து வைக்க அந்த வீட்டு மூதாட்டி எண்ணுகிறாரோ என்று தோன்றியது. இதனால் பெருங் கவலைக்குள் ஆழ்ந்தார். அவருடைய மனச்சாட்சி அவரை உறுத்தியது. கடைசியாக, மோகன்தாஸ் பின்வரும் கடிதத்தை அந்த அம்மாளுக்கு எழுதினார் :—


“பிரைட்டனில் நாம் முதன் முதலில் சந்தித்த தினத்திலிருந்து தாங்கள் என்னிடம் மிகவும் பிரியம் காட்டி வந்திருக்கிறீர்கள். என்னைத் தங்கள் புதல்வனாகவே எண்ணி என்பொருட்டுக் கவலை எடுத்து வந்திருக்கிறீர்கள். எனக்கு மணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்பி அதற்காக இளம் பெண்களை எனக்கு அறிமுகம் செய்துவைத்து வருகிறீர்கள். ஆனால் காரியம் மிஞ்சிப் போவதற்கு முன்னால், தங்களுடைய அன்புக்கு நான் அருகனல்லன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தங்கள் வீட்டுக்கு வரத் தொடங்கியபோதே நான் இல்லறத்தான் என்பதைத் தெரிவித்திருக்க வேண்டும். இங்கிலாந்தில் இந்திய மாணாக்கர்கள் பிரம்மசாரிகள் போல் நடிப்பதை அறிந்து நானும் அவ்வாறு செய்துவந்தேன். என் தவறினை இப்போது உணர்கிறேன். சிறுவனாயிருந்தபோதே எனக்கு மணம் ஆகிவிட்டது. இப்போது எனக்கு ஒரு புதல்வனும் உளன். இத்தனை காலம் இந்த விவரங்களைத் தங்களுக்கு அறிவியாதிருந்ததன் பொருட்டு என் உள்ளம் வருந்துகிறது. இப்பொழுதேனும் உண்மை சொல்லுவதற்கு இறைவன் எனக்குத் தைரியம் அளித்தது பற்றி மகிழ்ச்சியடைகிறேன். என்னைத் தாங்கள் மன்னித்து விடுவீர்களா? எனக்குத் தாங்கள் அறிமுகம் செய்து வைத்த இளம்பெண் விஷயத்தில் தகுதியற்ற உரிமை எதையும் நான் எடுத்துக் கொண்டதில்லையென்று உறுதி கூறுகிறேன். நான் ஏற்கனவே கலியாணமானவன் என்னும் விஷயம் தங்களுக்குத் தெரியாதாதலின், எங்களிருவருக்கும் விவாகமாக வேண்டுமென்று தாங்கள் விரும்பியது இயல்பே. விஷயம் இதற்கு மேல் போகக் கூடாது என்று உண்மை கூறலானேன்.

“இக்கடிதத்தைப் படித்ததும் தங்கள் அன்புக்கு அபாத்திரனாக நான் நடந்து கொண்டதாகத் தாங்கள் கருதினால் அதற்காகத் தங்கள்மீது வருத்தப்பட மாட்டேன். தாங்கள் இதுகாறும் என்மீது காட்டிவந்த பிரியத்துக்கும், செய்த உதவிக்கும் என்றென்றைக்கும் நன்றிக் கடன்பட்டவனாவேன். இதற்குப் பிறகும் தாங்கள் என்னைப் புறக்கணியாமல், தங்கள் வீட்டுக்கு வரத் தகுதியுள்ளவனாகக் கருதினால் நான் மகிழ்ச்சியடைவேனென்று சொல்ல வேண்டியதில்லை. தங்கள் அன்புக்கு இது மற்றோர் அறிகுறி என்று கருதுவதுடன் அந்த அன்புக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளவும் முயல்வேன்.”

மறு தபாலில் அந்த ஆங்கில மூதாட்டியிடமிருந்து பின்வரும் பதில் வந்தது :—

“உண்மையறிவிக்கும் உமது கடிதம் பெற்றேன். நாங்கள் இருவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம். இடி இடியென்று சிரித்தோம். நீர் கூறும் பொய்மைக் குற்றம் மன்னிக்கற்பாலதே. ஆனால் உண்மை நிலையை எங்களுக்கு அறிவித்தது நலமேயாகும். உமக்கு நான் அனுப்பிய அழைப்பு இதனால் மாறுபடவில்லை. அடுத்த ஞாயிற்றுக்கிழமை கட்டாயமாக உம்மை எதிர்பார்க்கிறோம். உமது குழந்தை மணத்தைப் பற்றி எல்லா விவரங்களையும் கேட்டு மகிழ ஆவல் கொண்டிருக்கிறோம்.”


மேற்படி பதில் கிடைத்த பிறகு மோகன்தாஸின் மனதில் இருந்த பெரும் பாரம் நீங்கிற்று. இதற்குப் பிறகு சந்தர்ப்பம் நேர்ந்த போதெல்லாம் தமக்கு விவாகம் ஆகிவிட்டது என்ற விவரத்தை அவர் தெரிவித்து விடுவது வழக்கமாம்! (தொடரும்)





கடல் செய்த தவம்


● புது டில்லியிலிருந்து சென்னைக் கவர்னர் கொண்டு வந்த மகாத்மாவின் அஸ்தி கலசம் சென்னை அரசாங்க மாளிகையில் உள்ள ராஜாஜி மண்டபத்தில் அலங்கரித்த விமானத்தில் ஏழு தினங்கள் வைக்கப்பட்டிருந்தது.








மகாத்மாவின் அஸ்தி கலசத்தைத் தரிசிப்பதற்காக அரசாங்க மாளிகைக்குத் தினந்தோறும் பதினாயிரக் கணக்கான மக்கள் வந்தார்கள். இம்மாதிரி ஆண்களும் பெண்களும் தனித்தனி வரிசையில் 'க்யூ' நின்று ராஜாஜி மண்டபத்துக்குள் சென்று தரிசித்தார்கள்.



பிப்ரவரி 12உ பிற்பகலில் சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்தும் இம்மாதிரி மகாத்மா உருவப் பட ஊர்வலங்களும் பிற ஊர்வலங்களும் அரசாங்க மாளிகைக்கு வந்து கொண்டிருந்தன. வீதியில் நிற்க இடமின்றி வீட்டு மச்சுகளிலும் மரங்களின் உச்சிகளிலும் ஜனங்கள் ஏறி நின்றார்கள்.








அஸ்தி கலச ஊர்வலம் கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்ததும் ஐந்து லட்சம் ஜனங்கள் பக்தி பரவசமாகப் பார்த்திருக்கச் சென்னைப் பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ரெட்டியார் அஸ்தியைக் கடலிலே சேர்த்தார்.





சித்திரை மாதத்துக் கடும் வெய்யிலில் சென்னை திருவல்லிக்கேணித் தெருவொன்றின் தார் உருகி இளகிக் கொண்டிருந்தது. காற்று வசதியில்லாத பழைய காலைய வீடொன்றின் முன் பக்கத்து அறையில் ஸம்பத்குமாரன் ஜன்னல் வழியாக வீதியைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான். வெய்யிலின் கடுமை பொறுக்காமல் ஜுரத்தினால் வாடி மெலிந்திருந்த அவன் உடல் வியர்த்துக் கொட்டிற்று. தேகத் துன்பத்தினாலோ, உள்ளேயிருந்து கர்ண கடூரமாய் வந்த குழந்தையின் அழுகையினாலோ அவன் கொஞ்சமும் பாதிக்கப்படவில்லை. அவ்வளவு தூரம் அவன் சிந்தனையில் லயித்துக் கிடந்தான்.

யாருடைய வரவை எதிர்பார்த்து அவன் வீதியைப் பார்த்த வண்ணமிருந்தானோ, அந்தத் தகப்பனாரைச் சுற்றித்தான் அவனுடைய எண்ணங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஸம்பத்துக்கு அவன் அப்பாவின் போக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. தந்தையிடம் அவன் கொண்டிருந்த அளவற்ற அன்பின் காரணமாக, இந்த அணுகுண்டு சகாப்தத்தில் அவர் நடத்திய தன்னலமற்ற தியாக வாழ்வு அவனுக்கு ஒரு பக்கம் ஆச்சரியத்தையும், இன்னொரு பக்கம் வேதனை நிறைந்த வெறுப்பையுமே விளைவித்தது. தந்தையின் தியாகக் கதையைப் பாட்டி சொல்லக் கேட்டு அவன் தெரிந்து கொண்டிருந்தான். ஓயாத உழைப்பு, வியாதியின் துன்பம், குடும்பத் தொல்லை இவற்றிலிருந்து தன் தந்தைக்கு விடுதலை என்பதே கிடையாதா? தம்பியின் சுகநலத்துக்காக அவர் தம் சொந்தச் சௌகரியங்களைக்கூடப் பலியிட்டுக் கொள்ள வேண்டுமா?

அடுத்த நிமிஷம் ஸம்பத்குமாரனுக்குத் தன் அப்பாவை வாட்டி வதைக்கும் சித்தப்பாவின் நினைவு வந்தது. அந்த நினைவில் அவருடைய கட்டு வாய்ந்த சரீரத்தையும் சுந்தர ரூபத்தையும், நாகரிக அலங்காரங்களையும் கண்ட அவன், தன் தந்தைக்கும் அவருக்குமிருந்த வித்தியாசத்தை ஆயிரந்தோராவது தடவையாக உணர்ந்து உள்ளத்தில் சீற்றங் கொண்டான். சிறு பையனாக இருந்தபோது கணக்குப் பாடத்தில் பரீட்சை பார்க்கிறேன் என்று சித்தப்பா தன்னை 'மடையன், மூட்டான்!' என்று அழைத்ததையும் கன்னத்தில் அறைந்ததையும் ஸம்பத் நினைத்துக் கொண்டான். அத்துடன் வெகு சீக்கிரத்திலேயே தான் ஒரு 'அகௌண்டெண்ட்' ஆகப் போவதை புணர்ந்ததும் அவனுக்குத் தன்னையும் அறியாமல் 'குபீர்' என்று சிரிப்பு வந்தது.

காந்தி அஞ்சலி — 7

பூமி அழுகிறது!

*

மாஜி பிரெஞ்சுப் பிரதம மந்திரியும் பிரபல பிரெஞ்சு சோஷியலிஸ்டுமாகிய லியான் ப்ளும் காந்திஜியின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டுத் திடுக்கிட்டுப் போய்க் கூறியதாவது:

காந்திஜியின் மரணச் செய்தியைக் கேட்டுப் பூமியே துக்கம் கொண்டாடி அழுகிறது.

நான் காந்திஜியைப் பார்த்ததில்லை: அவருடைய பாஷையும் எனக்குத் தெரியாது; அந்த நாட்டில் நான் காலடி எடுத்து வைத்ததும் இல்லை. எனினும், என்னுடைய உயிருக்குயிராக விளங்கிய ஒருவர் இந்த உலகத்திலிருந்து மறைந்துவிட்டதைப் போன்ற சோகம் எனக்கு உண்டாகிறது.

இத்தகைய மாபெரும் மகான் கொலை செய்யப்பட்டதைக் கண்டு இந்திய மக்களுக்கு ஆத்திரம் உண்டாகத்தான் உண்டாகும். ஆனால் இந்த மாபெரும் தியாகம், முரண்பட்ட பல சக்திகளையெல்லாம் ஒன்றாகப் பிணைத்து ஐக்கிய இந்தியாவை உண்டாக்க வேண்டும். இதுதான் அவருக்கு ஏற்ற ஞாபகார்த்தமாக அமையும்.

"என்னடா, சிரிக்கிறாய்?" என்று அன்புடன் கேட்ட வண்ணம் அப்பா உள்ளே நுழைந்தபோதுதான் அவன் இந்த உலகத்துக்கு வந்தான்.

கிருஷ்ணஸ்வாமி நெற்றி வியர்வையைத் துடைத்த வண்ணம், "என்டா ஸம்பத்து, சிற்றப்பாவிடமிருந்து தபால் ஏதாவது வந்ததா? இந்தத் தடவையாவது ஏதாவது பணம் கிணம் அனுப்புகிறேன் என்று எழுதியிருக்கிறானா?" என்று கேட்டார்.

ஸம்பத் ஒரு கிஷணம் விழித்தான். பிறகு, "அவரிடமிருந்து ஒரு கடிதமும் வரவில்லை, அப்பா!" என்று சொல்லிக் கொண்டே படுக்கையில் நன்றாக நீட்டிப் படுத்துக் கொண்டான். அவன் நெஞ்சு மட்டும் 'படக்' 'படக்' கென்று அடித்துக் கொண்டது. தகப்பனாரிடம் அவன் மனமறிந்து பொய் சொன்னது அன்றுதான் முதல் தடவை. வந்தக் கடிதத்தில் தன் பணத் தொல்லைகள் சிறிதளவு குறையக் கூடிய சமாசாரத்தை அவர் எதிர்பார்த்திருந்தாரோ, அந்தக் கடிதத்தில் அந்தக் கஷ்டம் பின்னும் அதிகரிக்கக் கூடிய வேண்டுகோள் ஒன்று இருந்த போது, அதை அவரிடம் கொடுக்க எப்படி மனம் வரும்?

இந்தக் காரியத்தினால் பின்னால் தனக்கு என்ன வசை மொழிகள் கிடைத்தாலும் கிடைக்கட்டும், தற்போதைக்குக் கடிதத்தை மறைத்து விடுவோம் என்று அவன் உறுதி செய்து கொண்டான். படுக்கைக் கடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கடிதம் ஈட்டிபோல் அவன் முதுகைத் துளைத்தும் அவன் தன் முகத்தில் ஒருவித பாவமுமின்றி "கடிதம் வரவில்லை!" என்று அழுத்தமாகவே சொல்லிவிட்டான்.

சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டுக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒரு பெருமூச்சுடன் ஸ்நானம் செய்ய உள்ளே சென்றார்.

2

உலகத்தில் சிலர் கஷ்டப்படுவதற்கென்றே பிறக்கின்றனர்; சிலர் மதியீனத்தினால் கஷ்டத்தைத் தாமாக வரவழைத்துக் கொள்கின்றனர்; சில வரப்பிரஸாதிகளையோ கஷ்டம் அண்டவும் மறுக்கிறது! இதில் முதற் பிரிவைச் சேர்ந்தவர் கோடவாசல் கிருஷ்ணஸ்வாமி. அந்த நாற்பத்தைந்து வயதிலேயே அவர் தம் உடல் சுருங்கி உயிர் ஒடுங்கிப் போய் விட்டார். இருமல் வியாதியால் உலர்ந்து போன அவர் கூட்டு மார்பில் குடிகொண்டிருந்த அஞ்சாத நெஞ்சமே அவருடைய இருண்ட வாழ்க்கைக்கு ஒளி தரும் நந்தா விளக்காக இருந்தது.

கிருஷ்ணஸ்வாமிக்குத் தம்முடைய பதினேழாவது வயதிலேயே தாயையும் மூன்று வயதுத் தம்பியான சுந்தரராமனையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுவிட்டது. எப்படியோ 'ஸ்கூல் பைனல்' வகுப்பைத் தாண்டிவிட்டு அவர் உத்தியோக வேட்டையாடப் புறப்பட்டார். அங்குமிங்குமாகப் பல வேலைகளில் அமர்ந்து கடைசியில் திருவல்லிக்கேணி கடைத் தெருவில் 'கிரெஸண்ட் ஸ்டோர்ஸ்' என்ற பெரிய மளிகைக் கடையொன்றில் குமாஸ்

ராக நிலைத்து விட்டார். தம்முடைய வருவாயைக் கொண்டு கிருஷ்ணஸ்வாமியால் சுகஜீவனம் நடத்திவிட முடியவில்லை. வயிற்றைக் கட்டி வாயைக் கட்டித் தம்பி சுந்தரராமனுக்கு மட்டும் ஒரு குறைவும் வைக்காமல் அவனை வளர்த்து வந்தார். தம்முடைய இருபத்திரண்டாவது வயதில் தாயின் ஹிம்ஸை பொறுக்காமல் சௌந்தரம் என்ற குணவதியை அவர் மணந்து கொண்டார்.

இருண்ட மேகத்தில் வெள்ளி விளிம்பென அவருடைய இல்லறம் விளங்கிற்று. தெய்வத்துக்கு இது பொறுக்கவில்லை போலும்!—கிருஷ்ணஸ்வாமி 'புத்'தென்ற நரகத்தில் 'பொத்'தென்று விழாமலிருக்க அவருக்கு ஓர் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றுக் கொடுத்துவிட்டுச் சௌந்தரம் விடை பெற்றுக் கொண்டாள்.

பரம வேதாந்தியான கிருஷ்ணஸ்வாமி இதையும் பொறுத்தார். தம்பியை மூத்த குமாரனாகவும், தம் குழந்தையை இளைய குமாரனாகவும் பாவித்து வளர்த்து வந்தார். மறு விவாகம் செய்து கொள்ளவில்லை.

சுந்தரராமனுக்குயுக்த வயது வந்ததும், கிருஷ்ணஸ்வாமி அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்ததோடு, உத்தியோகமும் பார்த்து வைத்தார். அவன் சுயமரியாதை உள்ளவனாயிருந்தால், "அதுவரை தன் அண்ணாவுக்குக் கொடுத்த சிரமம் போதும்!" என்று அத்துடன் காருக்காக விலகிக் கொண்டிருக்கலாம். அதுதான் இல்லை. அவன் தன் வரும்படியை ஊதாரித்தனமாகச் செலவழித்ததோடு நில்லாமல், கிருஷ்ணஸ்வாமியிடம் மேலும் மேலும் 'பணம், பணம்' என்று நச்சரித்துக் கொண்டேயிருந்தான். அது மட்டுமல்ல; தன் மனைவி மக்களை வருடத்திற்கு எட்டு மாதங்களுக்குக் குறையாமல் அவருடைய வீட்டிலேயே விட்டு வைத்திருந்தான். அதற்கேற்றாற்போல் அவனுடைய உத்தியோகமும் அடிக்கடி மாற்றலாகிக் கொண்டேயிருந்தது. கிருஷ்ணஸ்வாமி மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் நிலைமையைத் தம்மால் கூடிய மட்டும் சமாளித்து வந்தார். அவ்வாறு சமாளிப்பது தமது கடமையென்றும் அவர் கருதினார்.

அந்த வீட்டில் ஸம்பத்து இருந்த அறையை ஒட்டினாற்போல் ஒரு கூடம். அதற்கடுத்து ஒரு சமையலறை. இதுவே அவர்கள் 'போர்ஷன்'. கிருஷ்ணஸ்வாமி, அவருடைய தாயார், ஸம்பத் இவர்களைத் தவிர, சுந்தரராமனின் நாலு குழந்தைகளும் அங்கே இருந்தன. மூத்தவன் ரகுவுக்கு வயது பத்து; அதிகச் செல்லத்தால் அடங்காத்தனமும் பிடிவாதமும் உருவானவன். அடுத்தவன் சாரங்கன்; நல்ல புத்திசாலி; பெரியப்பா என்றால் உயிர். இவர்கள் இருவரும் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தனர். அடுத்த இரு குழந்தைகளுக்கும் முறையே ஆறு, நாலு வயது. இப்போது ஐந்தாவது தடவையாகப் பிரசவிப்பதற்கு ஸம்பத்தின் சித்தியும் வந்திருந்தாள். அவளுக்குப் பிறந்தகத்தில் யாருமில்லாததால் எல்லாப் பிரசவங்களும் கிருஷ்ணஸ்வாமியின் வீட்டிலேயே நடந்தன. இவ்வளவு நெருக்கடியில் ஸம்பத், சர்க்கார் டிப்ளொமா பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான்.

விடிந்தால் பரீக்ஷை; சித்திக்கு ராத்திரி வேதனை கண்டுவிட்டது. டாக்டருக்கும் நர்ஸுக்கும், வீட்டுச் சாமான்களுக்கும் மருந்துக்குமாக அவன் அலைந்த அலைச்சலும், குழந்தைகளின் ரகளையும், வேளை தவறிச் சோறும், படிப்பினால் தூக்க



......அந்தத் தகப்பனாரைச் சுற்றி .....

யின்மையும் சேர்ந்து பரீக்ஷை முடிந்ததும் முடியாததுமாக அவனைக் கடுமையான ஜுரத்துடன் படுக்கையில் கிடத்தி விட்டது. ஓரிரண்டு இடங்களில் 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்தும் வாரக் கணக்குப் பார்த்தும் அவன் மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதித்து வந்தான். இரண்டு மாதமாய் அந்த வருமானமும் கிடையாது. குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி அதிகமாகி விட்டது.

"இந்த நிலைமை இன்னும் நீடித்திருக்க விடக் கூடாது. விட்டால் அப்பா இன்னும் ஓரிரண்டு வருடங்கள் கூட உயிரோடிருக்கமாட்டார். இதற்கு ஒரே ஒரு வழி தானிருக்கிறது. எப்படி தம்பி விஷயத்தில் தம்முடைய கடமையைச் சரிவர—ஏன், தம் சக்திக்கும் அதிகமாகவே தமையன் செய்தாரோ, அப்படியே தம்பியும் தன் கடமையை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டியது நியாயந்தானே? அவன் அவ்விதம் நடந்து கொள்ளாவிட்டால் கடமையை அவருக்கு உணர்த்துவதில் பிசகு என்ன இருக்கிறது? 'அதிகப் பிரசங்கி' என்று என்னைப் பகைத்துக் கொண்டால் பகைத்துக் கொள்ளட்டும். அதற்காக அப்பா இப்படி உயிரோடு சாவதைப் பார்த்துக் கொண்டு என்னால் இனி ஒருகணமும் சும்மா இருக்க முடியாது. அவருக்கு அமைதியையும் ஓய்வையும் சீக்கிரம் தேடித் தரவேண்டும். இதை நான் விரும்புவது சுயநலமாகுமா?" என்று எண்ணினவனாய், ஸம்பத் ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

3

பொம்மிப்பேட்டை என்ற சிற்றூர் நெல்லை ஜில்லாவில் ரயில் மார்க்கத்தில் இருக்கிறது. ஒரு சிவன் கோவில், விஷ்ணு ஆலயம், சுமார் மூன்னூறு வீடுகள், ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள், நாலைந்து தோட்டங்கள், சினிமாக் கொட்டகை, கடை வீதி முதலியவைகள் கொண்டது. பன்றிகளைக் கூட்டம் கூட்டமாக அங்கே காணலாம். அந்த ஊரில் 'நல்ல சகுனம்' நோக்கிச் செல்ல வேண்டிய அவசியமே யில்லை—கர்த்தப கீதம் கேட்ட வண்ணமிருக்கும்! ஊருக்குச் சற்றுப் புறத்தே போனால்தான் ஆடு-மாடு, பயிர்-பச்சை, தோப்பு-துரவு போன்ற கிராமிய அழகைக் காணலாம்.

பொம்மிப் பேட்டையிலிருந்து நாற்பது மைலுக்கப்பாலிருந்த கடுகுக்குடி என்ற ஊருக்கு மராமத்து இலாகா சாலை யமைத்துக் கொண்டிருந்தது. இது சம்பந்தமாகச் சுந்தரராமனை பொம்மிப்பேட்டையில் போட்டிருந்தார்கள்.

சுந்தரராமன் சுந்தரரூபன்; சுகசரீரி. நல்ல உடுப்புக்கள் அணிவதிலே அவனுக்குப் பிரியம் அதிகம். எந்தப் பட்டிக்காட்டில் போட்டாலும் சரி, சலவை செய்த துணிகளை அணிந்து கொண்டால்தான் அவனுக்குச் சரிப்படும். கோட்டு, ஷர்ட்டு, காக்கி அரை நிஜார், மேஜோடுகள் இவை ரகத்துக்கு ஒரு டஜனாவது கந்தல் கிழிசல் இல்லாமல் அவனிடத்தில் இருக்கவேண்டும். பட்டணத்திலிருந்தோ அருகிலிருக்கும் பெரிய டவுனிலிருந்தோ இவைகளை ஆர்டர் கொடுத்து வரவழைத்துக் கொள்வான். சுந்தரராமன் சோறு இல்லாமலிருந்தாலு மிருப்பான், நாளைக்கு நாலைந்து வேளைகளுக்குக் குறையாமல் அவனுக்குக் காப்பி வேண்டும். பியூன் 'ஸுபர்வைசர் ஐயா'வுக்குக் காப்பியும், சிகரெட்டும், வெற்றிலைப் பாக்கும் வாங்கிவர பொம்மிப் பேட்டைக்கும் வேலை நடைபெறும் இடத்துக்குமாகத் தினம் ஐந்தாறு 'ட்ரிப்'புகளாவது போய் வரவேண்டும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

சொந்த 'வேஷ'வுக்கான சாமக்கிரியைகள், 'பொமேட்' சோப்பு வகையறாக்கள் இவைகளுக்காக மாதம் பத்து ரூபாய் செலவாகும். சைகிள் உத்தியோகச் சின்னமல்லவா? இருநூறு ரூபாய்க்கு ஒரு சைகிள் வாங்கினால் இரண்டு வருடங்களில் அது உருத் தெரியாமல் போய்விடும். வந்த விலைக்குத் தள்ளிவிட்டுப் புதிதாக ஒன்று வாங்கிக் கொள்வான். இப்படியே கைக் கடிகாரமும். இப்படியாக நானாவிதச் செலவுகளும் சேர்ந்து அவன் சம்பளத்தை மட்டுமல்ல, அந்தப் 'படி' இந்தப் 'படி' என்று வந்த மேல் வரும்படியையும் சேர்த்து ஏப்பமிட்டுவிட்டு இன்னும் தமையனிடமிருந்தும் எதிர்பார்க்கச் சொல்லும்!

ஊர் விட்டு ஊர் மாற்றும்போது சுந்தரராமனுக்குச் சம்பளம் வரத் தவறினாலும் தவறும், இரண்டு வருடத்துக்கொரு புத்திர சந்தானம் ஏற்பட மட்டும் தவறினதே யில்லை! தனக்குச் சௌகரியமோ, அசௌகரியமோ சில தப்பாலிகளைப் போல் அவன் பெண்சாதி பிள்ளையைப் போகுமிடத்துக் கெல்லாம் இழுத்துக்கொண்டு போவ தில்லை. அண்ணா இருக்கும்போது என்ன

கவலை! வருடத்தில் ஏதோ சில மாதம் மனைவி அவனுடன் இருப்பாள், அவ்வளவுதான்!

பொம்மிப்பேட்டையில் வேலை நடந்து கொண்டிருந்த இடத்தில் சுந்தரராமனுக்கென்று பிரத்தியேகமாக ஒரு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அதில் உட்கார்ந்து அன்று வந்த பத்திரிகையை அவன் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது பியூன் ரங்கசாமி தான் வாங்கிவந்த காப்பியுடன் அன்றையத் தபாலையும் கொணர்ந்து வைத்துவிட்டுப் போனான். ஆபீஸ் தபாலைத் தவிர அவனுக்கு வேறு கடிதமொன்றும் வந்திருந்தது. காப்பியைக் குடித்தவாறே கவரை உடைத்து உள்ளே இருந்த கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்:—

திருவல்லிக்கேணி,
22—8—'47

தேவரீர் சிற்றப்பா அவர்களுக்கு,

அனந்த கோடி நமஸ்காரம். இப்பவும் இங்கு யாவரும் க்ஷேமம். அங்கு நீங்களும் க்ஷேமமென்றே நம்புகிறேன். வழக்கம்போல் அப்பா பதில் எழுதாமல் இம்முறை நான் எழுதுவதற்குக் காரணம் என்ன தெரியுமா? தள்ளாத காலத்தில் உங்கள் தாயார் நாள்முழுதும் அடிமைபோல உழைத்துச் சாவதையும், வியாதியால் வாடும் உங்கள் தமையன் மனக் கவலையினாலும் எண்ணற்ற குடும்பத் தொல்லைகளினாலும் இரவு பகல் தூக்கமில்லாமல் சிந்தனையில் உழன்று மடிவதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டுமென்ற ஆசைதான்!

நான் ஜுரத்தில் படுத்துக் கொண்டு விட்டதால் இரண்டு மாதங்களாக என் வருமானமும் நின்றுவிட்டது எனவே பணக் கஷ்டம் பின்னும் அதிகமாகிவிட்டது. சித்தியும் பிரசவத்துக்கு வந்திருக்கும் இந்தச் சமயத்தில் அப்பா படும் கஷ்டத்தை நீங்கள் உணரத்தானில்லையா? அல்லது உணர்ந்தும் சும்மா இருக்கிறீர்களா? சித்தி பிரசவிக்கப் போகும் இந்தச் சமயத்திலாவது நீங்கள் ஏதாவது பணம் அனுப்பி வைப்பீர்கள் என்று எதிர்பார்த்தால், கைக்கடிகாரமும் செலவுக்கு ரூபாய் நூறும் அனுப்பச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறீர்களே. இதை என்னவென்று சொல்வது?

உங்களைப் போடும் ஊர்களெல்லாம் மனித சஞ்சாரமற்ற பொட்டல் காடுகளா? அங்கே மனிதர்கள் குழந்தை யென்றும் குட்டி யென்றும், வீடென்றும் வாசலென்றும் குடித்தனம் நடத்துவதே யில்லையா? அந்த [illegible] ஊர்களில் நரிகள் ஊளையிட்டு உலாவி வரவா சர்க்கார் சாலைகள் அமைக்கிறீர்கள்?

பெரிய பிள்ளைகள் இருவரும் வேண்டுமானால் இங்கேயே இருக்கட்டும். சித்தியை மற்றக் குழந்தைகளுடன் என்று அனுப்பினால் உங்களுக்குச் சௌகரியப்படும் என்பதை மட்டும் தயவுசெய்து உடனே தெரிவிக்கவும்.

இப்படியெல்லாம் நான் எழுதியிருப்பதை அதிகப்பிரசங்கித்தனமாக எடுத்துக்கொண்டு நீங்கள் என்மீது கோபம் கொள்ள மாட்டீர்களென்று நினைக்கிறேன். ஏனெனில், தம் அந்திய காலத்திலாவது தந்தை கொஞ்சம் அமைதியுடன் இருக்க வேண்டுமென்று நான் விரும்புவதுபோல் நீங்களும் விரும்புவீர்களல்லவா?

இப்படிக்கு,
ஸம்பத்குமாரன்.

இந்தக் கடிதத்தைப் படித்ததும், சுந்தரராமனின் முகத்தில் கோபக் கனல் வீசிற்று. கடிதத்தைக் கசக்கி கிஜார்ப் பையில் திணித்துக்கொண்டு, தாமதமின்றி உடனே ஒரு கடிதம் எழுதி அன்றையத் தபாலிலேயே சேர்த்துவிட்டான். ரூபாய் ஐம்பதும் அத்துடன் அனுப்பிவைத்தான்!

அந்தக் கடிதத்தைப் படித்த கிருஷ்ணஸ்வாமி தம்மையும் அறியாமல், 'பாரம் தீர்ந்தது!' என்ற பாவனையில் ஒரு பெருமூச்சு விட்டார். "போட்டிருக்கும் ஊரில் சகல சௌகரியங்களும் இருந்தால், அவன் தன் குடும்பத்தை அழைத்துக்கொள்ள விரும்புவது நியாயந்தானே?" என்று சொல்லி, சுந்தரராமனை மிகவும் மெச்சிக் கொண்டார்.

சம்பத்குமாரன் மட்டும் ரகசியமாகச் சிரித்துக்கொண்டே தன் சித்தியின் பொம்மிப் பேட்டை பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்தான்!

4

அன்றிரவு ஸ்டேஷனுக்குச் சென்றிருந்த கிருஷ்ணஸ்வாமி, ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுதுமாறு சொல்லிவிட்டு வந்தார். ஆனால் அவர்கள் சென்று ஒரு மாதமாகியும் அங்கிருந்து ஒரு கடிதமும் வரவில்லை.

இதனால் அவருடைய மன வேதனை நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. ஸம்பத்



குமாரனால் அதைப் பார்த்துச் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவன் மெள்ள விஷயத்தை அவரிடம் தெரிவித்தான். அதைக் கேட்டதும் அவர் திடுக்கிட்டு, "என்ன காரியம் செய்துவிட்டாய்!" என்று பொருமினார்.

"அந்திய காலத்திலாவது நீங்கள் கொஞ்சம் அமைதியுடன் இருக்க வேண்டாமா, அப்பா?" என்றான் ஸம்பத்.

"அதற்காக என் தம்பியை நான் உயிருடன் இழந்துவிட முடியுமா, என்ன? தனக்கென வாழ்வதில் உள்ள அமைதியைக் காட்டிலும் பிறர்க்கென வாழ்வதிலல்லவா உண்மையான அமைதி இருக்கிறது?" என்றார் கிருஷ்ணஸ்வாமி.

இந்தச் சமயத்தில் எதிர்பாராத ஓர் அதிசயம் நிகழ்ந்தது. திடீரென்று தன் மனைவி மக்கள் சகிதம் உள்ளே நுழைந்த சுந்தரராமன், "நீங்கள் சொல்வது உண்மைதான், அண்ணா! ஆனால் எதற்கும் ஓர் எல்லை வேண்டாமா? என் வாழ்நாள் பூராவும் நான் சுகத்தை அனுபவிப்பது, எனக்காக நீங்கள் வாழ்நாள் பூராவும் கஷ்டத்தை அனுபவிப்பது என்றால், அது எந்த விதத்தில் நியாயமாகும்? உங்களுடைய கஷ்டத்தில் நானும் கொஞ்சம் பங்கு எடுத்துக்கொண்டால் என்ன? நான் மறந்துவிட்ட என் கடமையை ஸம்பத் எனக்கு ஞாபகமூட்டினால்தான் என்ன?" என்றான் உணர்ச்சியுடன்.

இதைக் கேட்ட ஸம்பத்குமாரனும் அவன் தந்தையும் திகைத்து நின்றனர். அவர்களுடைய திகைப்பைக் கண்ட சுந்தரராமன் மேலும் தொடர்ந்து, "என்ன, எனக்கு எப்படி இந்த புத்தி வந்தது என்று திகைக்கிறீர்களா? எல்லாவற்றுக்கும் இவள்தான் காரணம். ஒரு மாதம் உங்களுக்குக் கடிதம் எழுதாமல் இருந்தாலும் இருந்தேன், என்னை இவள் என்ன பாடு படுத்திவிட்டாள்!" என்றான் தன் மனைவியைச் சுட்டிக் காட்டிச் சிரித்துக் கொண்டே.

"இவரை இப்போது கருங்கல்பாளையத்துக்கு மாற்றி விட்டார்கள். இவர் அங்கு சென்று என்னை அழைத்துக் கொள்ளும் வரை நான் இங்கேயேதான் இருக்கப் போகிறேன்!" என்றாள் சித்தி.

"அவன் அழைத்துக் கொள்ளா விட்டாலும் பாதகமில்லை; நீ எப்போதும் இங்கேயே இருக்கலாம்" என்றார் கிருஷ்ணஸ்வாமி.

"முடியாது; நான் அவளை அழைத்துக் கொள்ளத்தான் அழைத்துக் கொள்வேன்!" என்றான் சுந்தரராமன்.

"போட்டி பலமாயிருக்கிறதே!" என்று சொல்லிச் சிரித்தான் ஸம்பத்.

ஊதிக் கெடுத்தான்!

* * *



ஜமீன்தார் ஒருவருக்குத் தீராத வயிற்று வலி. பல வருடங்களாக ஒரு டாக்டர் தினந்தோறும் அவருக்கு வைத்தியம் செய்து வந்தார். ஆயினும் ஜமீன்தாருடைய வயிற்று வலி தீருவதும் தீராததுமாக இருந்து வந்தது. ஒருநாள் அந்த டாக்டருக்கே உடம்பு சரியில்லை. தமக்குப் பதிலாகத் தம்மைப் போலவே டாக்டரான தம் மகனை அனுப்பிவைத்தார். அவன் சென்று சிகிச்சை செய்ததில், ஜமீன்தார் வயிற்றுவலி அடியோடு தீர்ந்துவிட்டது. டாக்டரின் மகனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அப்பாவிடம் வந்து விஷயத்தைச் சொல்லிவிட்டு அவருடைய பாராட்டுதலை எதிர்பார்த்து நின்றான்.

"போடா, முட்டாள்! அவர் ஒருவருடைய 'பிணி'க் கொண்டே இத்தனை நாளும் நம் குடும்பம் பிழைத்து வந்தது. அதைப் போய்க் கெடுத்துத் தொலைத்தாயே!" என்றார் அவர்!

மது விலக்கு

அநேக குடும்பங்களின் வாழ்க்கையை உயர்த்தும்

இது எப்படி?

தினசரி மதுவின் காரணமாக சிலவு செய்த பணத்தை சேமித்து

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை

வாங்குங்கள்

ஒவ்வொருவரும் 5 ரூபாய் முதல் 15000 ரூபாய் வரையில் வாங்கலாம்

தபாலாபீஸ்களிலாவது கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடமாவது, ஸேவிங்ஸ் பீரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

P.N.S.O. MADRAS. N.C.3

அபாயகரமான

தூசி கிருமிகளிடம்

ஜாக்கிரதையாய்

இருங்கள்



தூசிக் கிருமிகளினால் தொண்டை உபாதைகள் ஏற்பட்டு சுவாஸப் பையையும் பாதிக்கக்கூடும். வாயில் கரையும் போதே, கிருமி நாசன ஸ்வாஸ காரண பெப்ஸ் தொண்டைக்கு ஹிதமளித்து சுவாஸமிழுக்கும்போதே கிருமிகளைக் கொல்லும் உன்னத மருந்து சத்துக்களை வெளிவிடுகிறது. இருமலை நிறுத்தி, வெந்துபோன மெல்லிய தோல்களுக்கு ஹிதமளித்து ரணத்தை ஆற்றி, சளியைப் போக்கி சுவாசப் பையிலுள்ள கிருமிகளைக் கொன்றும் பாதுகாக்கிறது.



PEPS

பெப்ஸ்

கிருமி நாசன ஸ்வாச
மாத்திரைகள் சாப்பிடுங்கள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்

எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்

ஏஜண்டுகள் :— மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

No. 6

நமச்சல், வலி

பித்த வெடிப்பு கொண்ட காலை

விரைவில் ஆற்றி சொஸ்தப்படுத்துகிறது



கோடிக் கணக்கானவர்களின் பாதங்களை ஜாம்பக் சொஸ்தப்படுத்துகிறது. வலியைப் போக்குகிறது. வேக்காடையும், வீக்கத்தையும் தவிர்க்கிறது. பித்த வெடிப்பினால் முரடாகும் பாதத்தை மிருதுவாக்குகிறது. உடைந்து போன குழிப் புண் மேல் தடவினால், ஜாம்பக் அதில் ஏற்படும் கசிவைத் தடுத்து, விரைவில் குணப்படுத்துகிறது. சருமத்தில் ஏற்படும் வியாதி, காயம், படை, எக்ஸிமா, சிராய்ப்பு, பரு, வலி முதலியவைகளுக்கு ஜாம்பக் மிகவும் சிறந்தது.




Zam-Buk

உலகப் பிரசித்திப் பெற்ற மூலிகைக் களிம்பு

மிருகக் கொழுப்பின்மைக்கு உத்தரவாதம்

ஏஜண்டுகள் :— மெஸர்ஸ். தாதா & கோ., பி. டி. மதராஸ்

No. 3



வி. எஸ். எஸ்.

பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்தால் எப்படியிருக்குமோ, அப்படித்தானிருந்தது சுந்தரேசனுக்கு. காரணம், அவன் தகப்பனார் எழுதியிருந்த கடிதம்தான்:

சிரஞ்சீவி சுந்தரேசனுக்கு,

"உனக்குக் காலாகாலத்தில் கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசை. அதற்கேற்றாற் போல் நம் எதிர்வீட்டு முனிஸிபல் என்ஜினியர் தமது பெண்ணை உனக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார். பெண் அடக்க ஒடுக்கமாக இருப்பதால் உன் அம்மாவுக்கும் பரம திருப்தி. உன்னுடைய சம்மதம் தெரிந்தவுடன் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான். பெண்ணின் போட்டோ வேண்டுமானால் எழுது."

இப்படிக்கு,
ராமகிருஷ்ண ஐயர்.

• • •

இரண்டு மாதங்களுக்கு முன் இரண்டு வார லீவில் சுந்தரேசன் பூங்கொடிக்குப் போயிருந்தபோது நடந்த சம்பவம் அது. அன்று மாலை தன் வீட்டு வாயிலில் சுந்தரேசன் நின்று கொண்டிருந்தான். அப்போது 'கலகல' வெனக் கன்னங்களில் குழி விழச் சிரித்தவாறே ஒரு பெண் கையில் புத்தகக் கட்டுடன் எதிர்த்த வீட்டுக்குள் நுழைந்தாள். அதற்குப் பின் அநேக தடவை அவன் எதிர் வீட்டு ஜன்னல் பக்கம் அந்தப் பெண்ணைப் பார்த்தான். சில சமயம் இருவர் கண்களும் மௌன பாஷையில் ஏதோ பேசிக்கொண்டதும் உண்டு. அப்போதெல்லாம் "பெண் என்றால் இவளல்லவா பெண்!" என்று தனக்குள் எண்ணிக் கொள்வான் சுந்தரேசன்.

"கல்யாணம் செய்துகொள்வதாயிருந்தால் இந்தப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்!" என்று தீர்மானிப்பதுதான் சுந்தரேசனுக்குச் சுலபமாக இருந்ததே தவிர, அந்தத் தீர்மானத்தைத் தன் தகப்பனாரிடம் தெரிவிப்பது கஷ்டமாயிருந்தது.


இரண்டு வார லீவுக்குப் பிறகு சுந்தரேசன் குழம்பிய மனத்துடன் பம்பாய்க்கு வந்து சேர்ந்தான். தன்னுடைய விருப்பத்தைக் கடித மூலமாகவாவது தன்னுடைய தந்தைக்குத் தெரிவிக்கலாமென்று அவன் எண்ணினான். ஆனால் அதற்குத் தைரியம் வரவில்லை!

இந்த நிலையில் 'திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை!' என்பது போல், அவன் தகப்பனாரிடமிருந்து 'நீ எதிர் வீட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறாயா?' என்று கேட்டுக் கடிதம் வந்தால் அவனுக்கு எப்படி இருக்கும்? உடனே, "பெரியவர்களுக்குச் சம்மதமானால் எனக்கும் சம்மதமே. அம்மாவுக்குப் பெண் பிடித்தால் எனக்கும் பிடித்த மாதிரிதான். போட்டோகூட வேண்டாம்!" என்று சாதுர்யமாக மறு தபாலில் பதில் எழுதிப் போட்டு விட்டான்.

கல்யாணத்திற்கு முதல் நாள் அசல் மாப்பிள்ளை முறுக்குடன் பம்பாயிலிருந்து பூங்கொடிக்கு வந்து சேர்ந்தான் சுந்தரேசன். அன்று இரவு ஏக தடபுடலான ஊர்வலத்திற்குப் பின், பெண்ணும் மாப்பிள்ளையும் மனையில் முதன் முதலாகச் சந்திக்கும் சமயம் வந்தது. அளப்பரிய ஆவலுடன் தன் பார்வையை அருகிலிருந்த மணமகளின் மீது செலுத்தினான் சுந்தரேசன். என்ன இது, பக்கத்தில் நாவற்பழ நிறத்துடன் உட்கார்ந்திருக்கும் இவளா அவன் மனத்திலே புரட்சியை உண்டுபண்ணிய எதிர் வீட்டுப் பெண்! அவள் எங்கே?

சுந்தரேசன் லீவில் வந்தபோது எதிர் வீட்டிலிருந்த முனிஸிபல் என்ஜினியர், இரண்டு மாத காலத்துக்கெல்லாம் வேறு ஊருக்கு மாற்றப்பட்டு விட்டாரென்றும், அதே வீட்டிற்குக் குடிவந்த வேறொரு என்ஜினியரின் பெண்ணைப் பற்றித்தான் அவன் தகப்பனார் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் என்றும் அவனுக்கு எப்படித் தெரியும்?





செல்லக் குழந்தைகள்!

ராஜி

ஒரு காட்டில் யானை ஒன்று வசித்து வந்தது. அதற்கு வெகு நாட்கள் கழித்து இரண்டு குட்டிகள் பிறந்தன. அந்தக் குட்டிகள் பிறந்ததும் யானைத் தாயார் இறந்து விட்டது. யானைத் தகப்பனார் தன் குட்டிகள் இரண்டையும் மிகவும் பிரியமாக வளர்த்து வந்தது.

தன்னுடைய குட்டிகள் விளையாடுவதற்காக அந்த யானை எத்தனையோ விளையாட்டுச் சாமான்களை வாங்கிக் கொடுத்திருந்தது. அந்தச் சாமான்களையெல்லாம் இரவில் தூங்கும்பொழுது கூட யானைக் குட்டிகள் தங்கள் பக்கத்திலேயே வைத்துக் கொள்வது வழக்கம். ஏன் தெரியுமா? அவைகள் வசித்து வந்த வீட்டில் எலிகளின் தொந்தரவு மிகவும் அதிகமாக இருந்தது. அந்த எலிகள் தங்களுடைய விளையாட்டுச் சாமான்களை எங்கே கடித்து எறிந்து விடுமோ என்று யானைக் குட்டிகளுக்கு ஒரே பயம்.




ஒருநாள் இரவு யானை படுத்துக் கொண்டிருந்தபோது அதன் காதிலிருந்து ஏதோ 'கீச், கீச்' என்று சத்தம் வந்தது. யானைக்கு என்ன பண்ணுவது என்றே தெரியவில்லை. ஆனால் அந்தச் சத்தம் இரவில்தான் இருந்ததே தவிர, பகலில் இல்லை. சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று இரவுகள் தன் காதில் தொந்தரவு ஏற்படவே, ஒருநாள் அது காது வைத்திய நிபுணரான புலி வைத்தியரிடம் சென்றது. யானையின் வியாதி என்னவென்பதை விசாரித்துத் தெரிந்து கொண்ட புலி, "யானையாரே, கவலைப் படாதீர்! உங்கள் காதில் ஒன்றுமில்லை. உங்களுடைய தந்தங்கள் இரண்டும் சற்று ஆடுவதினால்தான் உமக்கு இரவில் படுக்கும்போது உபத்திரவம் நேருகிறது. இப்பொழுதே சென்று நல்ல பல் வைத்தியரைக் கொண்டு உம்முடைய தந்தங்கள் இரண்டையும் பிடுங்கி எறிந்து விடுங்கள்!" என்று சொல்லிற்று.

"என் தந்தங்களைப் பிடுங்கி விட்டால் என்னுடைய அழகல்லவா போய்விடும்!" என்று யானை சற்று யோசித்தது. பிறகு எப்படியாவது காது உபத்திரவம் தொலைய வேண்டுமே என்று ஒரு பல் வைத்தியரிடம் சென்று, தன்னுடைய தந்தங்களைப் பிடுங்கி எறிந்து விட்டது.

ஆனால், பாவம்! தந்தங்களைப் பிடுங்கிக் கொண்டதுதான் மிச்சம்; காதிலிருந்து வந்த சத்தம் நிற்கவில்லை. மறுநாள் யானை ஒரு குரங்கு வைத்



தியரிடம் சென்றது. குரங்கு, யானையின்மீது ஏறி அதன் காதுகளை நன்றாகப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "யானையாரே! உங்கள் காதில் ஒன்றுமில்லை. இது ஏதோ மூளை சம்பந்தமான வியாதி என்று தோன்றுகிறது. பேசாமல் நீங்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் சென்று, ஒரு மாதம் தங்கி வைத்தியம் செய்துகொண்டால் சரியாய்ப் போய்விடும்" என்றது.



இதைக் கேட்டதும் யானைக்கு நிஜமாகவே பைத்தியம் பிடித்துவிட்டதுபோலிருந்தது. அது என்ன செய்வதென்று தெரியாமல் இங்குமங்குமாகச் சிறிது நேரம் அலைந்துவிட்டுக் கடைசியில் நாட்டு வைத்தியத்தில் பெயர் போன நரியாரிடம் சென்றது. "நான் கொடுக்கும் தைலத்தை ஒரு வாரம் காலையிலும் மாலையிலும் தலையில் தேய்த்துக் கொள்ளுங்கள். அந்த ஒரு வாரமும் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாக இருங்கள். உங்கள் காது குணமாகிவிடும்!" என்று நரி சொல்லிற்று.

'பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போவதைவிட ஒரு வாரம் பட்டினி கிடப்பதே மேல்' என்று நினைத்த யானை, நரி கொடுத்த தைலத்தை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தது. நரி வைத்தியர் சொன்னபடி ஒருவாரம் பட்டினி கிடந்ததால் அதனுடைய உடம்பு இளைத்ததே தவிர, காதில் உண்டாகும் 'கிச்,' 'கிச்' என்ற சத்தம் மட்டும் நிற்கவே யில்லை.


அன்று இரவு தன் குட்டிகள் இரண்டையும் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டு, யானை வழக்கம் போல் தூங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது இரண்டு பூனைகள் எங்கிருந்தோ வந்து யானையின் காதுகளின் அருகில் உட்கார்ந்து கொண்டு, "மியாவ், மியாவ்!" என்று கத்தின. யானை கோபங்கொண்டு எழுந்து தன் தூக்கத்தைக் கெடுத்த பூனைகளைத் துதிக்கையினால் பிடித்து அடிக்கப் போயிற்று.

"யானையாரே, கோபித்துக் கொள்ளாதீர்கள்! எங்களுக்குப் பசி அதிகமாக இருக்கிறது. உங்கள் காதுகள் இரண்டிலும் ஒளிந்து கொண்டிருக்கும் எலிகளை மட்டும் எடுத்து எங்களிடம் கொடுத்து விடுங்கள். நாங்கள் போய் விடுகிறோம்" என்று பூனைகள் கேட்டுக் கொண்டன.

"எலியா! என் காதிலா!" என்று யானை ஆச்சரியத்துடன் கேட்டது. அதற்குள் யானைக் குட்டிகள் இரண்டும் எழுந்து உட்கார்ந்து கொண்டு, "அப்பா, அப்பா! அந்த எலிகளைப் பூனைகளிடம் கொடுத்து விடாதீர்கள். அவை நிஜ எலிகள் அல்ல; நீங்கள் விளையாடுவதற்காக வாங்கிக் கொடுத்த ரப்பர் எலிகள். அவற்றை நிஜமான எலிகள் என்று எண்ணிப் பூனைகள் பிடித்துக் கொண்டு போய்விடுமோ என்று எங்களுக்குப் பயம். அதனால்தான் நாங்கள் தினசரி படுத்துக் கொள்ளும் போதெல்லாம் உங்கள் காதுகளில் அந்த எலிகளை ஒளித்து வைப்பதும், பொழுது விடிந்ததும் எடுத்துக் கொள்வதுமாக இருந்தோம்!" என்றன.

இதைக் கேட்டதும் யானைக்கு விஷயம் விளங்கிவிட்டது. "இந்தச் சமாசாரத்தை முன்பே எனக்குச் சொல்லியிருக்கக் கூடாதா? உங்களால் என்னுடைய அழகான தந்தங்களை யல்லவா நான் இழந்துவிடும்படி நேர்ந்தது!" என்று அது வருத்தத்துடன் சொல்லிற்று.

செல்லக் குழந்தைகள் இரண்டும் தங்கள் 'புத்திசாலித்தன'த்தை எண்ணித் தலைகுனிந்து கொண்டன.





பூஜா பலன்

ராஜலக்ஷ்மி

ராஜம்மாள் வாசற் கதவைச் சாத்தி விட்டு வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்டே தன் கணவனுக்கு எதிரே யிருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்தாள். கலியாணமாகி அவ்விருவரும் குடித்தனம் செய்ய ஆரம்பித்து வருஷம் நான்கு ஆகி யும் புத்திர சந்தானம் ஏற்படவில்லை. அதற்காக ஒரு பெரியவரின் உபதேசப்படி அவர்கள் வாரந்தோறும் திங்கட்கிழமை யன்று சிவபூஜை நடத்திவந்தார்கள்.

அன்று திங்கட்கிழமை. பூஜை முடிந்து சாப்பிட்டும் ஆகிவிட்டது. புருஷனும் மனைவியும் முன் பக்கம் வந்து விட்டனர். தோட்டத்துக் கதவைப் பூட்டி முன்புற ஹாலைத் தாளிட்டாகிவிட்டது. அவர்கள் வீட்டுச் சமையற்காரனும் தன் வேலைகளை முடித்துக் கொண்டு வழக்கம் போல் பின்புற அறைக்குப் போய்ப் படுத்துவிட்டான்.

இரவு மணி 9-30. வாசற் கதவை யாரோ லேசாகத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்ததும் வாசல் வராந்தாவில் ஒரு சாமியார் நின்று கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அவருடைய தலைமயிர் கொண்டை வைத்துக் கட்டியிருந்தது. முகத்தில் நீண்ட தாடி; அரையில் புலித்தோல் வேஷ்டி; கையில் கமண்டலம்; அத்துடன் ஒரு சிறு தடி. அவர் சுப்பிரமணியனைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்; அவன் பிரமித்தான்.

"அப்பா! என்ன யோசனை? உன் பூஜையின் பலனை அனுபவிக்க முடியாமல் தவிக்கிறாயே! வந்த அதிதியை வரவேற்கக்கூட உனக்குத் தெரியவில்லையே!" என்றார் சாமியார்.

அதன் பிறகுதான் சுப்பிரமணியன் இரண்டு கைகளையும் கூப்பி அஞ்சலி செய்து "ஸ்வாமி, மன்னிக்க வேண்டும். தாங்கள் யாரோ தெரியவில்லை. எப்படி இந்தத் தோட்டத்தைத் தாண்டி உள்ளே வந்தீர்கள்?" என்று கேட்டான்.

வந்தவர் சற்றுக் கோபக் குறியுடன், "உன் வீட்டைத் தேடி வரத் தெரிந்த எனக்குத் தோட்டக் கதவா ஒரு தடை? உம்... அனுபவம் போதாதவன்! சரி, இரவு இங்கே தங்க நமக்கு இடம் தருவாயோ?" என்று கேட்டார்.

"ஸ்வாமி! தாங்கள் திவ்யமாகத் தங்கலாம். இந்த வீடு தாங்கள் கொடுத்த பிச்சையல்லவா? எங்கள் அனுமதியும் வேண்டுமா?" என்றாள் ராஜம்.

பெரியவர் மகிழ்ந்து, "உனக்கு இருக்கும் பக்தி உன்னுடைய கணவனுக்கு இல்லையே!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார். பிறகு அவர் தாம் ஹாலில் இருப்பதாகச் சைகை செய்தார்.

"ஆகாரம் ஏதேனும் தேவையா?" என்று ராஜம் உபசரிக்க, வந்தவர் "வேண்டாம்!" என்று சொல்லி விட்டார். இருவரும் அவரை ஹாலில் விட்டு விட்டு வாசற் கதவைச் சாத்திக் கொண்டு படுக்கச் சென்று விட்டனர். இரவு வெகு நேரம் வரை சாமியார் இருந்த ஹாலிலிருந்து சிவநாம உச்சரிப்பு கேட்டவண்ணமிருந்தது.

மறு நாள் காலை ஐந்தரை மணி. ராஜம் வழக்கம்போல் விழித்துக் கொண்டு கணவன் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். பிறகு, இருவரும் எழுந்து வெளியே வந்தனர். என்ன ஆச்சரியம்! சாமியாரைக் காணோம்! ஆனால் நடுஹாலில் ஒரு சிறு கடிதமும் அதைக் காற்றில் பறக்க வொட்டாமல் வைத்தது போல் ஒரு சிவலிங்கமும் இருந்தன. அந்தக் கடிதத்தில், "குழந்தைகளே! உங்கள் பூஜை வீண்போகவில்லை. அடுத்த திங்கட்கிழமை பகவான் நேரில் வருவார். அவருக்கு ஆயிரத்தெட்டு வெள்ளி ரூபாய்களைப் பாத காணிக்கையாக வைக்கவும். இது ரகசியம்" என்று எழுதியிருந்தது.

அவ்வளவுதான்; "விஷ்ணுவும் பிரம்மாவும் கண்டறிய முடியாத ஆதியந்தமில்லாத பரம்பொருளை நாம் பார்க்கப் போகிறோம்! கலியுகத்திலும் பகவான் நேரில் காட்சியளிக்கப் போகிறார்! உண்மை பக்தி பலனளிக்காமல் போகுமா?" என்றவாறெல்லாம் தம்பதிகள் எண்ணிக் கொண்டனர்.

அடுத்த திங்கட்கிழமை மாலை. பூஜை சம்பிரமமாக நடந்தது. வழக்கத்தைவிட அன்று அதி விமரிசை; சாப்பாடும் முடிந்தது; படுக்கும் நேரமும் வந்தது; பகவானைக் காணோம். மணி பன்னிரண்டும் ஆகிவிட்டது; சமையற்காரன் கூடப் படுத்து விட்டான். ஊர் சந்தடி யடங்கி விட்டது. சுப்பிரமணியனையும் அவன் மனைவியையும் தவிர, அந்தப் பிராந்தியத்தில் எல்லோரும் தூங்கிவிட்டனர்.

திடீரென்று எங்கிருந்தோ சங்கொலி கேட்டது. பின்புறக் கூடத்தில் பூஜை அறையில் மந்தஹாஸத்துடன் சாக்ஷாத் மஹேஸ்வரர் வீற்றிருந்தார். பக்கத்தில் மங்கலாக எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கு பிரகாசமாக எரிய ஆரம்பித்தது. உடனே தம்பதிகள் இருவரும் அங்கு சென்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வெள்ளி ரூபாய்களை ஒரு தாம்பாளத்தில் வைத்துக் கொடுத்தனர்.

அதைக் கீழே வைக்கும்படி பரமேசுவரர் சமிக்ஞை செய்தார். அவர் திருவுருவத்தைக் கண்ணால் கண்டபடி இருவரும் மெய்ம் மறந்து நின்றனர். "பெண்ணே, நீங்கள் க்ஷேமமாயிருக்க யாம் பஞ்சாக்ஷரம் ஜபித்து விட்டுச் செல்வோம். நீங்கள் போய்ப் படுக்கலாம்" என்றார் சாமியார்.

மற்றும் ஒரு முறை நமஸ்கரித்து விட்டு ஆனந்த மேலீட்டால் கண்ணீர் பொழிய, மெய் சிலிர்க்க இருவரும் பின்புறம் பாராமல் தங்கள் அறைக்குச் சென்று விட்டனர்.


வெகுநேரம் ஜப சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அது எப்பொழுது ஓய்ந்ததோ அவர்கள் அறியார்கள். மறுநாள் அவர்கள் எழுந்திருக்கும்போது மணி ஏழுக்குமேலிருக்கும். பால்காரன் மூன்றும் முறையாகக் கத்திக் கொண்டிருந்தான். "எங்கே அம்மா போய்விட்டாரு, சமையற்கார ஐயரு? கத்திக் கத்தித் தொண்டையெல்லாம் நோகுதே!" என்றான் பால்காரன்.

ராஜம் பாலை வாங்கி வைத்துவிட்டு, சமையற்காரனைக் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தான்; பதிலே யில்லை. அப்போது சுப்பிரமணியன் அவளை அழைத்து, "ராஜம்! வீணில் அவனைத் தேடாதே! சுவாமிகள் அவனை அழைத்துக் கொண்டு போய் விட்டார். இந்தக் கடிதத்தைப் பார்!" என்று அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டினான்.

கனம் பொருந்திய ஐயா,

சென்றவாரம் என் தங்கைக்குக் கல்யாணம் என்றும், எப்படியாவது ரூபாய் ஆயிரம் கொண்டுவர வேண்டுமென்றும் என் தமையன் எழுதியிருந்தான். தங்களுக்கு மூன்று வாரங்களுக்கு முன்னால் கிண்டி குதிரைப் பந்தயத்தில் ரூபாய் ஐயாயிரம் வந்தது எனக்குத் தெரியும். ஆனால் உங்களை யாசகம் கேட்டால் தருவீர்களா? ஆகவே, தங்கள் தெய்வ பக்தியைத் துணையாகக் கொண்டு நான் இந்த நாடகத்தை நடத்தினேன். பதற வேண்டாம்; தங்களுடைய பணம் கன்னிகாதானத்திற்குப் பயன்படப் போவதால், அந்தப் பலன் நிச்சயம் உங்களைச் சேரும்; அவசியம் உங்களுக்குப் பிள்ளையும் பிறக்கும். நோட்டாக வாங்கினால் எங்கே கண்டுபிடித்து விடுவீர்களோ வென்று, வெள்ளி ரூபாய்களாகக் கேட்டேன். விசேஷம் வேறொன்று மில்லை; வந்தனம்!

— சாமா சாமியார்.



நிருபர்கள் கவனிக்க!

ஸோமாஸ்

அன்று ஞாயிற்றுக்கிழமையாகையால் சாவகாசமாக நாற்காலியில் அமர்ந்து ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தேன்.

"ஸார்!" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. நான் உடனே எழுந்து செல்லவில்லை.

"ஸார்! ஸார்!!"

யாரோ கோபத்துடன் கூப்பிடுகிறார்கள் என்று தெரிந்தது. உடனே நான் வாசலுக்குச் சென்று, "வாருங்கள்! யாரைப் பார்க்க வேண்டும்? எங்கே யிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டேன்.

வந்திருந்தவர் முகம் கோபத்தால் சிவந்தது; அதற்கு அடையாளமாக மீசையும் துடித்தது. (ஆம்; அவருக்கு மீசை யிருந்தது!)

"என்ன ஐயா, உம்மை ஒருவர் பார்க்க வந்தால் வாசலில் வைத்தே பேசி அனுப்பி விடுவீர்கள் போலிருக்கிறதே! ரொம்ப நன்றா யிருக்கிறது!" என்று அவர் சீறி விழுந்தார்.

"மன்னிக்க வேண்டும். தங்களை நான் இதற்குமுன் பார்த்ததாக ஞாபகமில்லை. ஆகையினால், வேறு யாரையாவது தேடிக் கொண்டு வந்திருக்கிறீர்களாக்கும் என்று நினைத்தேன்!" என்று மிகவும் தணிவான குரலில் கூறினேன்.

"ஓகோ! உம்மைத் தெரிந்தவர்கள் தான் வந்து பார்க்க வேண்டுமோ? எனக்கு அது தெரியாது!" என்று கூறிச் சின்ன சிரிப்பு ஒன்று சிரித்தார். ஏளனமும் கோபமும் கலந்த அந்தச் சிரிப்பு, சிரித்துப் புரமெரித்த சிவபெருமானை எனக்கு ஞாபக மூட்டியது. நான் அதற்குமேல் ஒன்றும் அவரோடு பேசவில்லை. மிகவும் மரியாதையுடன் உள்ளே அழைத்துச் சென்றேன். ஆசனம் வழங்கிவிட்டு நானும் உட்கார்ந்து கொண்டேன்.



...என் குல்லாயை ஏன் கழற்றி எடுக்கிறீர்?

அவர் மிகவும் நாகரிகமாக உடை அணிந்திருந்தார். நன்றாய்க் கருகரு வென்று அடர்ந்து வளர்ந்திருந்த மீசையை முறுக்கி விட்டிருந்தார். அவர் நடை உடை பாவனையைக் கவனித்தபோது அவருக்கு அந்த ராஜபார்ட் மீசை மிகவும் பொருத்தம் என்றே தோன்றியது.

"தாங்கள் எங்கே யிருந்து வருகிறீர்கள்? என்ன காரியமாக வருகிறீர்கள்?" என்று மிகவும் வினயமாகக் கேட்டேன்.

"நான் எங்கே யிருந்து வந்தால் உமக்கு என்ன? உம்மைப் பார்த்து உம்முடன் பேசவேண்டும் என்றுதான் வந்தேன். வேறு விசேஷம் ஒன்றும் இல்லை!" என்றார் வந்தவர் மிகவும் அழுத்தமாக.

எனக்கு அவருடன் என்ன பேசுவது என்றே தோன்றவில்லை. "என்னை எப்படித் தெரியும் உங்களுக்கு?" என்று ஒரு கேள்வியை யோசனை யில்லாமலே கேட்டு வைத்தேன்.

"உம்மைத் தெரியாமல் என்ன? நீர் ஒரு பத்திரிகையைச் சேர்ந்தவர் என்று தெரிந்துதான் உம்மைப் பேட்டி காண வந்தேன்! போதுமா?"

"என்றால் என்ன ஆக வேண்டும்? தயவு செய்து சொல்லுங்கள். முடியுமானால் செய்கிறேன்!" என்றேன் நான், அவரைச் சீக்கிரம் அனுப்பி வைக்கும் நோக்கத்துடன்.

"உம்மால் ஆக வேண்டிய காரியம் ஒன்றுமில்லை. நான் கேட்கிற கேள்விகளுக்கு நீர் பதில் சொல்லும். போதும்!" என்றார் வந்தவர்.

அவர் குரலில் ஆத்திரம் கடுமையாகத் தொனித்தது. அதற்கு அப்புறம் அவர் கேள்விமேல் கேள்வியாக ராமபாணம் மாதிரி தொடுத்துக் கொண்டே போனார்.

அவர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் என்னால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. அந்தக் கேள்விகளைக் கீழே தந்திருக்கிறேன் :—

"சாமான்களின் கண்ட்ரோல் முறையையும் உணவுப் பொருள் பங்கீட்டு முறையையும் எடுத்துவிட வேண்டுமென்று பலர் அபிப்பிராயப்படுகிறார்களே, அது பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன?

"ரேஷன் அரிசி வாரம் முழுவதும் உமக்கு வருகிறதா?

"உணவுப் பொருள்களுக்குக் கறுப்பு மார்க்கெட் இருப்பதனால் எவ்வளவு சௌகரியமாயிருக்கிறது? அதுவும் தேச சேவையைச் சேர்ந்தது என்பதில் உமக்கு அபிப்பிராய பேதம் உண்டா?

"ஜமீன்தார், இனாம்தார் ஒழிப்பு மசோதா பற்றி உம் அபிப்பிராயம் என்ன?

"ஹோமியோபதி வைத்தியத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

"காதல் மணம், கலப்பு மணம் இவைகளில் உமக்கு நம்பிக்கை உண்டா?

"உமக்குப் பிரியமான விளையாட்டு எது?

"உமக்கு அடிக்கடி வரும் வியாதி எது?

"காப்பியா, டீயா? உமக்கு எது பிடிக்கும்?

"வெந்நீரிலா, பச்சை ஜலத்திலா? நீர் எதில் ஸ்நானம் செய்கிறீர்?

"உமது வீட்டில் கொசு இருக்கிறதா?

"நாய் வளர்ப்பது அவசியந்தானா?

"நீர் சைவமா, வைஷ்ணவமா?

"கோவிலுக்குப் போகும் வழக்கம் உண்டா?

"தமிழ்ப் படங்களைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

"சினிமாவினால் கல்வி புகட்டமுடியுமா?

"அலுமினியப் பாத்திரத்தைச் சமையலுக்கு உபயோகப்படுத்துவது பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

"காதல் இல்லாமல் கதை எழுத முடியுமா?

"கதையில்லாமல் பத்திரிகை நடக்குமா?

"பத்திரிகை வாழ்க்கைக்கு அவசியந்தானா?

"மறு பிறவியில் நம்பிக்கை உண்டா?

"தினம் காலையில் உலாவப் போவது உண்டா?

"நீர் உமது பொழுது போக்குக்காக எதை வைத்துக் கொண்டிருக்கிறீர்?



எத்தனை பத்திரிகை நிருபர்கள் வந்து...

"தற்காலக் கல்வி முறையைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?"

இப்படி அவர் பல கேள்விகளைச் சரமாரியாகக் கேட்டார். நானும் சில கேள்விகளுக்கு ஏதேதோ பதில் சொன்னேன். எனக்கு மிகவும் அலுப்பு ஏற்பட்டுவிட்டது. மூச்சு விடாமல் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டு வந்த அவருக்குக் கொஞ்சமாவது அலுப்பு உண்டானதாகத் தெரியவில்லை. மேலும் மேலும் பல கேள்விகளைக் கேட்டு என் பிராணனை வாங்கி விட்டார். எனக்கு ஆத்திரம் தாங்கவில்லை. எழுந்திருந்து இரண்டு கைகளையும் மேலே தூக்கிக் கும்பிட்டவண்ணம் பேச ஆரம்பித்தேன் :

"ஐயா, நீர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஏன் இப்படிக் காலையில் வந்து முன்பின் தெரியாத ஒருவரைப் பிராணனை வாங்குகிறீர்? உமது ஊரையோ பேரையோ சொல்ல மாட்டேன் என்கிறீர். நான் எதைப் பொழுது போக்காக வைத்துக் கொண்டிருந்தால் உமக்கு என்ன வந்தது? எனக்கு என்ன வியாதி வந்தால் உமக்கு என்ன? என் சொந்த விஷயங்களையெல்லாம் எதற்காகக் கேட்கிறீர்? ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமாக வந்து என் மூளையை ஏன் கழற்றியெடுக்கிறீர்? உமக்குக் கோடி நமஸ்காரம். தயவுசெய்து போய் வாரும். நீர் யார் என்று மாத்திரம் சொல்லிவிட்டுப் போம்!"

என் பேச்சைக் கேட்டு அவர் பயந்துவிடுவார் என்று நான் நினைத்தது தவறு என்பது எனக்குப் பின்னால்தான் தெரிந்தது. ஏனெனில், அவர் முகத்தில் ஏற்கனவே இருந்த ஆத்திரக் குறி இன்னும் அதிகமாயிற்று. கரை கடந்த அவரது

கோபத்துக்கு அவர் மீசையும் ஒத்துழைத்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவர் ஆத்திரத்துடன் பேச ஆரம்பித்தார்:—

"அடேயப்பா! உமக்கு என்ன கோபம் வருகிறது! நான் யார் என்பதை நீர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் சொல்லிவிட்டுத்தான் போகப் போகிறேன். நான் கேட்ட கேள்விகளுக்கு உமக்குப் பதில் சொல்லத் தெரியாவிட்டாலும் கோபமாவது வருகிறதே, அதுவரையில் சந்தோஷந்தான்! நான் யார் தெரியுமா? சமூக சேவா சங்கத் தலைவரான சாட்சாத் சௌமியநாதன் நான்தான்! என்னை எத்தனை பத்திரிகை நிருபர்கள் வந்து பேட்டி கண்டு எத்தனை எத்தனை கேள்விகள் கேட்டுத் திணற அடித்திருக்கிறார்கள் என்று உமக்குத் தெரியுமா? அந்தப் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்று நான் இன்று அதிகாலையில் உம்மிடம் வந்தேன். என் கேள்விகளினால் நன்றாய்த் திணறினீரா? அலுத்துப்போய் உமக்கு மண்டை வலி ஏற்பட்டதா? எனக்கு ரொம்ப சந்தோஷம். இருந்தாலும் எனக்குப் பூரணத் திருப்தி ஏற்படவில்லையென்பதை உமக்குப் புரியும் பத்திரிகை பாஷையில் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்; போய்வரட்டுமா?" என்று கூறிவிட்டு அவர் 'விர்'ரென்று, என் பதிலுக்குக் காத்திராமலே வேகமாய் வாசலை நோக்கி விரைந்து மறைந்தார்.

நான் ஒன்றும் தோன்றாமல் நின்றேன்.

காந்திஜியும் – சார்லி சாப்ளினும்

காந்தி மகாத்மா வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1934-ம் வருஷம் லண்டனுக்குப் போயிருந்தார். அப்போது உலகப் பிரசித்தி பெற்ற சினிமா நடிகரான சார்லி சாப்ளின் காந்திஜியைத் தரிசிப்பதற்காக அவர் தங்கியிருந்த ஜாகைக்கு வந்தார். சார்லி சாப்ளினை காந்திஜி அதற்கு முன் பார்த்தது இல்லை. ஆகையால் காந்திஜியின் நண்பர்களில் ஒருவர் சாப்ளினை காந்திஜியிடம் அழைத்துக்கொண்டு போய், "இவர்தான் உலகமெல்லாம் புகழ் பெற்ற சினிமா நடிகர் சார்லி சாப்ளின்" என்று அறிமுகம் செய்து வைத்தார்.

மகாத்மா காந்தி சார்லி சாப்ளினை ஆச்சரியத்துடன் பார்த்து, "இவர்தானா? இவர் எப்படி உலகப் புகழ் பெற்றார்?" என்று கேட்டார்.

"இவர் ஒரு ஹாஸ்ய நடிகர். இது வரையில் எத்தனையோ லட்சக்கணக்கான மக்களைத் தங்கள் கவலையை மறந்து குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்திருக்கிறார்!" என்று பதில் சொன்னார் அந்த நண்பர்.




"ஓ ஹோ! அப்படியா?" என்று சொல்லிவிட்டு, காந்திஜி சார்லி சாப்ளினோடு சுமார் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். அந்த அரை மணி நேரமும், உலகப் புகழ் பெற்ற ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளின் மகாத்மாவின் பேச்சைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டேயிருந்தார்!




காவேரியின் பாக்கியம்

காந்தி மகாத்மாவின் அஸ்தி கலசத்துடன் வந்த ரயிலை வழி யெங்கும் மக்கள் இப்படி எதிர் பார்த்து நின்றார்கள்.


ஒவ்வொரு ரயில்வே நிலையத்திலும் வண்டி புறப்படும் போது கைகூப்பி வணங்கி விடை கொடுத்து அனுப்பினார்கள்







திருச்சி நகரில் அஸ்தி கலசத்தைப் புஷ்ப விமானத்தில் வைத்து ஊர்வலம் நடத்தியபோது தெருவெல்லாம் தலைமயமாகக் காட்சி அளித்தது. போலீஸாரும் தொண்டு புரிந்து புண்ணியம் அடைந்தார்கள்.







★ ★ ★

மூன்று லட்சம் மக்களுக்கு மத்தியில் கனம் டாக்டர் ராஜன் துணை புரியக் கல்வி மந்திரி அவிநாசிலிங்கம் காந்தி மகானின் அஸ்தித் துகளைக் காவேரியில் கரைத்தார். காவேரி புனித மடைந்தது!

★ ★ ★

ஆடு சௌக்கியமா?

பம்பாய் நகரத்தைச் சேர்ந்த யூசுப் மெஹரலி ஒருமுறை அமெரிக்காவில் பிரயாணம் செய்தார். நியூயார்க்கிலிருந்து மெக்ஸிகோவுக்கு அவர் மோட்டாரில் போய்க் கொண்டிருந்தபோது, இடையில் ஒரு கிராமத்தில் இறங்கிச் சாப்பிடுவதற்காக அங்கிருந்த ஒரு ஹோட்டலுக்குப் போனார்.

ஹோட்டல் வேலைக்காரன் மெஹரலியையும் அவர் அணிந்திருந்த உடையையும் வியப்புடன் பார்த்தான். அவனுக்கு ஏதாவது பேசவேண்டும் போல இருந்தது.

“நீங்கள் எந்தத் தேசம், ஐயா?” என்று அவன் மெஹரலியைக் கேட்டான்.

“இந்தியா தேசம்” என்று பதில் அளித்தார் மெஹரலி.

“இந்தியாவா?—அப்படித்தான் நானும் நினைத்தேன்! — அங்கே, காந்தி சௌக்கியமாக இருக்கிறாரா?”

“ஓ, சௌக்கியமாய் இருக்கிறார்!”

“அவருடைய உண்ணாவிரதம் இன்னும் நடந்து வருகிறதா?”

“ஆகா! நடந்து வருகிறது.”

“அவருடைய வெள்ளாடு? — அது எப்படி இருக்கிறது?”

இதைக் கேட்டதும் மெஹரலிக்கு உண்டான வியப்பு கொஞ்ச நஞ்சம் அல்ல. அமெரிக்காவில் எங்கோ ஒரு மூலையில் உள்ள ஒரு ஹோட்டல் வேலைக்காரன் காந்திஜியைத் தெரிந்து வைத்திருந்ததில் அவ்வளவு அதிசயம் இல்லை. அவர் வெள்ளாட்டுப் பால் சாப்பிடுகிறார் என்பதைக் கூடத் தெரிந்து வைத்திருந்தது தான் அவருக்கு ரொம்ப அதிசயமாக இருந்தது. ‘காந்திஜி’ என்றதும், அடுத்தபடியாக அவர் அடிக்கடி உண்ணாவிரதம் இருப்பதும் வெள்ளாட்டுப் பால் சாப்பிடுவதும் உடனே ஞாபகத்துக்கு வரும்படியாக அவ்வளவு உலகப் பிரசித்தியாகி விட்டது.

மெஹர் அலி சிரித்துக் கொண்டே, “காந்திஜியும் சௌக்கியமாயிருக்கிறார்; அவருடைய வெள்ளாடும் சௌக்கியமாய் இருக்கிறது!” என்று பதில் சொன்னாராம்.

காந்திஜியின் அஸ்தி சென்னை சர்க்கார் மாளிகையில் பொது ஜனங்கள் தரிசிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த போது, நான் தோறும் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் வந்து தரிசித்து விட்டுப்போன வண்ணமாக இருந்தார்கள். அவர்களில் பெண்கள் பலர் மலர்களையும் ரூபாய்களையும் காந்திஜிக்குக் அன்புக் காணிக்கையாக வைத்துவிட்டுப் போனார்கள். பல மாதர்கள் அந்த அஸ்தி கலசத்தைப் பார்த்து விம்மி விம்மி அழுது விட்டுப் போனார்கள்.

வயது முதிர்ந்த ஒரு பெண்மணி ஒரு குவளையில் வெள்ளாட்டுப் பாலைக் கொண்டு வந்து காந்திஜியின் அஸ்திக்கு முன்னால் வைத்து விட்டு, “மகாத்மாஜி, தாங்கள் உயிரோடு இருக்கும்போது இந்தப் பாலைக் கொண்டுவந்து கொடுக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைக்கவில்லை. இப்போது நான் கொண்டுவந்து கொடுக்கும் இந்தப் பாலையாவது தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று சொல்லிவிட்டு விம்மி விம்மி அழுதபோது, அருகில் நின்ற அனைவரும் உருகிவிட்டார்கள்.

• • •

சென்னை நகரில் காந்திஜியின் அஸ்தி கலச ஊர்வலத்தின் போது ஒரு வியப்பான சம்பவம் நிகழ்ந்தது.

அஸ்தி கலசம் அலங்கரிக்கப்பட்ட ஒரு விமானத்தில் வைத்துப் பெண் தொண்டர்களால் இழுத்துச் செல்லப் பட்டது. அந்த விமானத்துக்கு முன்னால் இருபுறமும் குதிரைப் படை வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். திடீரென்று எங்கிருந்தோ ஒரு வெள்ளாடு அந்தக் குதிரைப் படைக்கு நடுவில் வந்தது. அது அந்தக் குதிரைப் படையுடன் கடைசிவரையிலும் சென்றது. ஊர்வலம் ரஸ்தாவை விட்டுக் கடற்கரைக்குத் திரும்பியபோது, அந்த ஆடு வந்தது போலவே எப்படியோ மறைந்து விட்டது.

ஒருவேளை, கருணாமூர்த்தியாகிய காந்தி மகானுக்குக் கடைசி மரியாதை செலுத்துவதற்காக அந்த வாயில்லா ஜீவனும் அங்கே வந்திருக்கலாம், யார் கண்டார்கள்!

கோர்ட்டுக்கு வந்த காரணம்

மகாத்மா காந்தியை 1922-ம் ஆண்டின் ஆரம்பத்தில் அஹமதாபாத் செஷன்ஸ் நீதிபதி புரூம்ஸ்பீல்டு விசாரித்து ஆறு வருஷக் காவல் தண்டனை விதித்தார். அப்போது கோர்ட்டில் மகாத்மா காந்தி கொடுத்த வாக்குமூலம் உலகப்பிரசித்தி யடைந்ததாகும். அதில் ஒரு பகுதி பின்வருமாறு:—

"இந்தியா, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், இதற்கு முன் எப்போதுமே இல்லாத விதமாக ஆண்மை குன்றிப்போயிருக்கிறது. இத்தகைய சர்க்காரிடம் விசுவாசமோ மதிப்போ வைத்திருப்பதை ஒரு குற்றமாக நான் கருதுகிறேன்.

இந்தியாவின் தற்போதைய இயற்கைக்கு முரண்பட்ட நிலைமையைப் போக்குவதற்காக ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் நான் ஒரு வழியைக் கண்டுபிடித்துக் காட்டியிருக்கிறேன். அதன்மூலம் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் தொண்டு செய்திருக்கிறேன் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நன்மையுடன் ஒத்துழைக்க வேண்டியது எப்படி ஒரு கடமையாகுமோ, அதைப் போலத் தீமையுடன் ஒத்துழைக்க மறுப்பதும் ஒரு கடமையாகும். இது என்னுடைய தாழ்மையான கருத்து. இதற்கு முன் காலத்தில், தீங்கு இழைத்தவனை ஹிம்ஸை மூலம் எதிர்த்து ஒத்துழையாமை இயக்கம் நடந்ததுண்டு. ஹிம்ஸை மூலம் நடக்கும் ஒத்துழையாமை இயக்கத்தால் தீமை ஒன்றுக்குப் பத்தாகப் பெருகும் என்பதை என் தேச மக்களுக்கு எடுத்துக் காட்ட நான் முயன்றிருக்கிறேன். தீமையை ஒருவன் ஆதரிக்கவில்லை என்றால் ஹிம்ஸையை அடியோடு கைவிட வேண்டியது அவசியமாகும். இதையும் நான் என் தேச மக்களுக்கு எடுத்துக்காட்டப் பிரயாசைப்பட்டேன். தீமையுடன் ஒத்துழைக்க மறுப்பதற்கு என்ன தண்டனை கிடைக்கிறதோ அதை விருப்பத்துடன் ஏற்று அநுபவிக்கவேண்டும்; இதுவே அஹிம்ஸையின் அடிப்படை.

ஆகவே, சட்டத்தின்படி எது குற்றம் என்று கருதப்படுகிறதோ, அதற்குக் கிடைக்கக்கூடிய அதிக பட்சமான தண்டனையைக் கேட்டு வாங்கி, அதை மகிழ்ச்சியுடன் அநுபவிப்பதற்காகவே நான் இங்கு வந்திருக்கிறேன்."


காந்திக் குல்லா வரலாறு



இந்தியாவின் சிறைச் சாலைகளில் காவல் கைதிகளுக்குக் கோடு போட்ட துணியில் குரங்குக் குல்லா கொடுக்கிறார்கள் அல்லவா? தென்னாப்பிரிக்கா சிறையில் காந்திஜிக்கு வெறும் வெள்ளைத் துணிக் குல்லாதான் கொடுத்தார்கள். சிறையிலிருந்து வெளிவந்த பிறகும் காந்தி மகான் சத்தியப் போருக்கு அறிகுறியாக அந்தக் குல்லாவை அணிந்திருந்தார். இந்தியாவுக்கு வந்த புதிதிலும் சில காலம் அந்தக் குல்லாவைத் தரித்திருந்தார். அப்போதிருந்து காந்திக் குல்லா இந்திய நாட்டில் பரவியது. பக்கத்திலுள்ள படத்தில் மகாகவி டாகூரையும் காந்திக் குல்லா அணிந்த மகாத்மாவையும் காணலாம்.



இதோ இவர் தான் ஆனந்த் மிஸ்ரா...
இப்போதுதான் ஆபீஸிலிருந்து வீடு திரும்புகிறார். நல்ல டீ ஒரு கோப்பை சாப்பிட விழைகிறார். ஆனால் பாவம், அது கிடைக்காது. ஏனெனில் கெட்டிலில் காய்ந்து கொண்டிருக்கும் வெந்நீர் நாள் பூராவும் காய்ந்து கொண்டேயிருந்தது. நல்ல தேயிலை பானத்துக்கு புதிதாகக்கொதித்த நீரே தேவை.
கோடிக்கணக்கான மக்கள் சோர்வை யகற்றி புத்துணர்ச்சிபெற தேயிலை பானம் அருந்துகின்றனர். ஆனால் தேயிலை பானம் அருந்தும் பலருக்கு நல்ல டீ எப்படி செய்வதென்பது தெரியாதது வருந்தத்தக்கது. நல்ல டீ தயாரிக்க செலவு ஏதும் அதிகமில்லை. ஐந்து சுலபமான முறைகளைக் கடைப்பிடிப்பதே போதுமானது. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் உங்கள் டீ நறுமணம் மிகுந்ததாயிருக்கவும் இம்முறைகளை உங்கள் மனதில் பதியவைத்து வீட்டிலும் அவை அனுசரிப்பது நலம்.
டீ
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.



லிப்டன்ஸ்
என்றால்
முதல்தரமான
டீ
LIPTON'S TEA GIRL
FINEST
INDIAN DUST TEA
LIPTON'S
TEA GIRL
FINEST
INDIAN DUST TEA

பொய்யா விளக்கே விளக்கு!

[டி. கே. சிதம்பரநாத முதலியார்]

ஜனவரி 30உக்குப் பத்து நாளைக்கு முன்னால் ஒருவன் மகாத்மா காந்தியின் உயிரை வாங்குவதற்காக வெடிகுண்டைப் போட்டான்; குண்டு தப்பி விட்டது. ஆனாலும் குண்டு எறிந்தவனைப் போலீஸார் கைது செய்து விட்டார்கள்.

காந்தியடிகள் என்ன சொன்னார்? "விட்டு விடுங்கள் கைதியை!" என்று சொன்னார். அவர் சொன்னபடியே அவனை விடுவித்து விட்டார்கள்.

குண்டு எறிந்தவனிடத்தில் யாதொரு கோபமும் இல்லை மகாத்மாவுக்கு. அவனை விடுவித்தார்; வாழச் செய்தார்.

அரிய ஒரு உண்மையை, அரிய ஒரு சாதனத்தை, நாம் கண்கூடாகப் பார்த்தோம். அப்படிப் பார்ப்பதற்கு நமக்குக் கொடுத்து வைத்திருந்தது.

தமிழ் நாட்டிப் பண்டைய காலத்தில் ஒரு வார்த்தை: அதாவது சால்பு.

சால்பு என்றால் உடல்பற்றியும் உயிர் பற்றியும் கடவுளைப் பற்றியுமே ஆராய்ந்து ஆராய்ந்து அனந்த நிலையிலே நிற்கும் உன்னதமான பண்பு. அந்தப் பண்பு உடையவர்கள் சான்றோர்.

சால்பு என்னும் உன்னத நிலையை அடைவது எல்லாருக்கும் எளிய காரியம் அல்ல. எவ்வளவோ பிரயத்தனப்பட்டு அடைய வேண்டும். அப்படிப் பிரயத்தனப் பட்டு அடைந்த பிற்பாடும், அந்த நிலையை அடைந்திருப்பது உண்மைதானா என்று சோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்விதம் சோதனைக்கு உள்ளாக்காமல் இருந்து விட்டால் ஏமாந்து போன காரியமாக முடியலாம்.

எப்படிச் சோதனை செய்து பார்த்து அந்த உண்மையை அறிய வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் சொல்லுகிறார்.

"இன்னா செய்தார்க்கு
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ
சால்பு!"

மனிதப் பிறவியால் அடைய வேண்டிய ஆனந்தத்தைப் பூரணமாக அடைய வேண்டியது சால்பு என்னும் உன்னதப் பண்பின் இலட்சியம். நமக்குக் கேடு செய்தவர்களுக்கும் (நமது உயிரையே வாங்க எண்ணியவர்களுக்குக்கூட) நன்மையைத் தொடர்ந்து செய்தால் அல்லாமல் வேறு எப்படி அடைய முடியும் அந்த ஆனந்தத்தை?— என்று கேட்கிறார் குறள் ஆசிரியர். 'சால்பு' என்னும் உயர்நிலையை ஒருவர் அடைந்தது உண்மைதானா என்று அறிவதற்குக் குறளாசிரியர் கூறும் சோதனை இது.

காந்தியடிகள் அந்தச் சோதனையில் தேறியவர்; தமது வாழ்க்கை யெல்லாம் தீங்கு செய்தவனுக்கு நன்மையே செய்து வந்தவர்; சால்பிற்கு உரிய பயனை வாழ்க்கையில் அநுபவித்த மகான்.

தீங்கு செய்தவர்க்கும் நன்மை செய்வதாகிய அரிய சாதனத்தைக் கைக்கொண்டு ஆனந்தத்தை அடைந்தார் மகாத்மா என்றோம். அந்தச் சாதனத்துக்கு வழிகாட்டியாய் நின்று ஒளி கொடுத்து வந்தது எது? சத்தியத்தில் உறுதியாக நிற்கும் நிலைதான், சகல விதமான சாதனங்களுக்கும் ஒளி கொடுத்து நம்மை நடத்துகிறது என்கிறார் காந்தியடிகள். திருவள்ளுவரும் அந்தத் திசையையே சுட்டிக் காட்டுகிறார்.

"எல்லா விளக்கும்
விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே
விளக்கு!"

சால்பிற்கு அதாவது அறிவிலும் ஒழுக்கத்திலும் இதயப் பண்பாட்டிலும் சிறந்து நிற்கும் சான்றோரின் தன்மைக்கு விளக்கம் கொடுப்பது சத்தியந்தான். "பொய்யாமை என்னும் விளக்குத்தான் உண்மை விளக்கு; மற்ற விளக்குகள் எல்லாம் விளக்கு அல்ல!" என்று திருவள்ளுவர் சொன்னார். திருவள்ளுவரின் வாக்கைக் காந்தியடிகள் செயலில் நடத்திக் காட்டினார்.

காந்தியடிகளின் சகாப்தத்தில் வாழக் கொடுத்து வைத்தோம் நாம். நம் முன்னோர்க்கும் அந்தப் பேறு இல்லை; இனி வருவோர்க்கும் அது இல்லை.

காலக்ஷேபம்

தகுந்த பரிசு!

ஒருவர் தாம் ஓட்டப் பந்தயத்தில் பரிசாகப் பெற்ற ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையின் அடியில் 'ஓட்டப் பந்தயப் பரிசு' என்று எழுதி அழகாக அதை மேஜைமின்மேல் வைத்திருந்தார். ஒருநாள் அவர் வீட்டில் நுழைந்த திருடன் அந்தக் கிண்ணத்தை அபகரித்துக் கொண்டு போய் விட்டான். காலையில் எழுந்ததும் அவர் வெள்ளிக் கிண்ணம் பறிபோனதை அறிந்தார். வெள்ளிக் கிண்ணம் இருந்த இடத்தில் பின்வருமாறு ஒரு கடிதம் இருந்தது:

"நானும் ஓட்டப் பந்தயத்தில் நிபுணன். இந்தக் கடிதத்தை நீர் பார்க்கும்போது நான் எவ்வளவோ தூரத்தில் இருப்பேன். எனக்குத்தானே வெற்றி? ஆகையால் நானே கிண்ணத்தை எனக்குப் பரிசாக வைத்துக் கொண்டு விட்டேன்!"

★

பக்ஷபாதம்!

"நம் நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் பக்ஷபாதமாகவே நடந்துகொள்கின்றன. ஒன்றாவது நேர்மையாக நடந்துகொள்ள வேண்டுமே! ஹூம்!"

"என்ன ஸார்! என்ன அப்படிப் பிரமாதமான பக்ஷபாதத்தைக் கண்டுவிட்டீர்கள்?"

"யாராவது பிரபலமான பெரிய மனிதர் இறந்துபோனால் அவரது மரணத்தைப் பற்றிப் பிரமாதமாக எழுதுகின்றன. ஆனால் அவர் பிறந்த தினத்தைப்பற்றி ஒன்றுமே எழுதவில்லை!"

★

பதில் எப்படி?

உபாத்தியாயர்:—கோபு! பால் சத்துள்ள இரண்டு பொருள்கள் சொல்லு!

பையன்:—ஒன்று திரட்டுப் பால், மற்றொன்று ஐஸ் கிரீம்!

காரணம் எப்படி?

"மாமா! என் பிறந்த நாளுக்கு இந்த வருஷம் நீங்கள் வாங்கிக் கொடுத்த பரிசைப்போல் இதுவரை யாருமே வாங்கிக் கொடுத்ததில்லை!"

"ஏன் அப்படி?"

"ஏனா? அந்த ஊதுகுழலை நான் ஊதாமல் இருப்பதற்காக அம்மா தினம் எனக்குக் காலணா தருகிறாளே!"

★

அவன் கவலை!

ஹோட்டலில் சாப்பிடுபவர்:—ஐயா, இதோ பாரும்! காப்பியில் ஒரு பொத்தான் கிடக்கிறது.

கொடுப்பவன்:—நல்ல வேளை! இவ்வளவு நேரமாக அதைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். முன்னமே சொல்லக் கூடாதா?

★

ஒரு சிறு திருத்தம்!

"ஏன் ஸார்! திருச்சி ஸ்டேஷன் எப்பொழுது வரும்?"

"அது உங்களை நோக்கி வராது, ஸார்! நீங்கள்தான் அதை நோக்கிப் போக வேண்டும்!"

★

அதிர்ஷ்டந்தான்!

சுப்பு:—அப்பா, அப்பா! உள்ளே ஒரு கருப்புப் பூனை வந்திருக்கிறது!

அப்பா:—வந்தால் வரட்டும். கருப்புப் பூனை அதிர்ஷ்டப் பூனை என்று உனக்குத் தெரியாதா!



சுப்பு:—ஓஹோ! அப்படியா? அது அதிர்ஷ்டப் பூனைதான்! எல்லாப் பாலையும் அதுதான் குடித்துக்கொண்டிருக்கிறது!


சிக்கல் மயமான
உலகில்
உண்மை வாய்ந்தவை
எளிதான விஷயங்களே
ஒரு சிறு வில்லை
உங்களுக்கு
ஆரோக்கியம்
அளிக்கமுடியும்
அது இயற்கைக்கு
மாறாக அன்றி அத
னுடன் ஒத்துவேலை
செய்கிறது
ஆஸ்ப்ரோவால்
இருதயத்துக்கு
ஒரு கெடுதியுமில்லை
'ஆஸ்ப்ரோ'
வலியையும் ஜுரத்தையும் போக்கடிக்கிறது
ஆடவர், ஸ்திரீகள், குழந்தை
கள், அனைவருக்கும் ஆஸ்ப்ரோ
செய்யக்கூடிய தென்ன
ASPRO
ASPRO
ASPRO
எங்கும்
கிடைக்கும்

சந்திரஹாரம்

ஆசிரியர் .... மொழிபெயர்ப்பு
பிரேம்சந்த் .... ரா. வீழிநாதன்

நாற்பத்துநான்காம் அத்தியாயம்
சிவப்பு விளக்கு

ரமாகாந் மோட்டாரில் ஏறி விட்டான். ஆனால் அவனுக்கு மூளை ஒரே படியாகக் குழம்பிக் கிடந்தது. "நாம் எங்கே இருக்கிறோம், எங்கே போகிறோம்?" என்றுகூட அவனுக்குப் புரியவில்லை. தெரிந்த பாதைகளெல்லாம் தெரியாத பாதைகளாகத் தோன்றின. அவனுக்குப் பத்மாவின் மீதோ, ஜெழவியின்மீதோ சிறிதுகூடக் கோபம் ஏற்படவில்லை. தனது பேடித்தனம், சபலம், பலவீனம் இவைமீது தான் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. போலீஸ்காரர்களுடைய சூழ்நிலையில் சிக்கியிருந்த அவனுக்கு, 'எது செய்யத் தகுந்தது, எது செய்யத் தகாதது' என்று சிந்தனை செய்யும் அறிவே மழுங்கி விட்டது. பத்மாவைச் சந்தித்துப் பேசின அன்றுதான் அவனுக்கு நாம் செய்யப் புகுந்திருக்கும் காரியம் மிகவும் அக்கிரமமானது' என்று தோன்றிற்று. அதற்குப் பிறகு அவன் அந்தச் சிந்தனையில் இறங்கவே யில்லை; போலீஸார் அம்மாதிரியாக அவன் சிந்தனை செய்வதற்குச் சந்தர்ப்பமும் அளிக்கவில்லை. அவர்கள் அவனுக்கு விதவிதமான ஆசைகள் காட்டி அவனைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டனர்.

"மனைவிக்குப் பயப்படலாமா, ஸார்? அவள் கோபம் உங்களை என்ன செய்துவிட முடியும்? நல்ல கல் இழைத்த நகையாக ஒன்றும், ஒரு பெரிய பணப் பையையும் அவள் முன்னிலையில் கொண்டுபோய் வைத்தீர்களானால் அவள் கோபம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். உங்கள் ஊர்ப் பக்கத்திலேயே, உங்களுக்கு ஒரு நல்ல வேலையும் கிடைத்து விட்டால் அப்புறம் உங்களுக்கு என்ன குறைச்சல், ஸார்?" என்றெல்லாம் கூறினர். அதைக் கேட்டதும் அவன் மதிமயங்கி விட்டான்.

அதற்குப் பிறகு பத்மாவைப் பார்த்துப் பேசும் சந்தர்ப்பமே அவனுக்கு வாய்க்கவில்லை. போலீஸார் தினம் அந்தப் பேச்சை எடுத்து அவனுக்கு ஊசியேற்றிய வண்ணம் இருந்தனர். ஆகையால்தான் அவன் தனது வெற்றியின் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காக, பத்மாவுக் கென்று ஒரு கல் இழைத்த சந்திர ஹாரம் வாங்கிக் கொண்டான். அதைக் கண்டதும் அவள் பூரித்துப் போவாள் என்பது அவன் எண்ணம். மறுநாள் போலீஸ் சூபரின்டெண்டு, ஐக்கிய மாகாணத்து ஹோம் செக்ரெட்டரியின் பெயருக்கு ஒரு கடிதம் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார். அது கிடைத்ததும், 'நான்கைந்து நாட்கள் தங்கி இந்த நகரை ஜாலியாகச் சுற்றிப் பார்க்க வேண்டும். பிறகு தேவிதீனையும் ஜெழவியையும் அழைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டுப் போக வேண்டும். அவர்கள் செய்திருக்கும் உதவியை என்றும் மறக்க முடியாது' என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக் கொண்டு அவன் பத்மாவைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டான்.

அவன் புறப்பட்ட காட்சி, கையில் புஷ்பத்தையும் நைவேத்தியத்தையும் எடுத்துக் கொண்டு தன் இஷ்ட தெய்வத்தைப் பூஜிக்

கப் போகும் பத்மாவை நினைவூட்டியது. ஆனால் அந்தத் தெய்வம் அவன் கேட்ட வார்த்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, அவன் கொண்டு வந்திருந்த நைவேத்தியத்தையும் புஷ்பங்களையும் காலால் மிதித்து உதைத்துத் தள்ளி விட்டால் அவனுக்கு எப்படியிருக்கும்! அவன் பத்மாவைப் பார்க்கப் போனதுதான் மிச்சமேயொழிய, வாய் திறக்க வழியில்லை.

போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டிருந்த அவனுக்கு இவ்வளவு நாட்கள்வரை நல்ல காற்று வாங்கும் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. இன்று வெளியே புறப்பட்டதும்— உடம்பில் நல்ல காற்றுப் பட்டதும் — அவனுடைய நல்லுணர்வு விழித்தெழுந்தது. இவ்வளவு நாட்கள் அவன் கையாண்டு வந்த அந்த மிருகத்தனம் தன் உண்மை உருவத்தில் அவனுக்குக் காட்சி அளித்தது. அப்பப்பா! அது எத்தனை பயங்கரமான பேய் உருவம் படைத்திருந்தது! அதை நினைத்தாலே அவனுள்ளத்தில் ஒருவித அச்சம் குடி கொண்டது. 'இப்பொழுதே போய் ஜட்ஜிடம் சகல விருத்தாந்தங்களையும் சொல்லிவிட்டால் என்ன?' என்று கூட அவன் எண்ணினான்.

“அப்படிச்சொன்னால் போலீஸார் நமக்கு எதிரிகளாகி விடுவார்களோ? சிறையில் நாம் வாடி மடிய நேருமோ? அதற்குப் பயந்தால் கட்டாது. ரகசியத்தை அம்பலப் படுத்தித்தான் ஆக வேண்டும். அதைக் கேட்டதும் ஜட்ஜ் தன்னுடைய தீர்ப்பை மாற்றிக் கொண்டாலும் கொண்டு விடுவார். தண்டிக்கப்பட்டவர்கள் இன்னும் 'ரிமாண்டி'ல்தான் இருக்கிறார்கள்; நிரபராதிகளான அவர்களுக்கு விடுதலை கிடைக்கவும் நியாய மிருக்கிறது. போலீஸாரின் கோபத்தை நாம் சிறிதும் லட்சியம் செய்யக் கூடாது. அவர்களுடைய கோபத்துக்குப் பயந்துதான் நாம் இந்தக் கதிக்கு ஆளானோம்! அக்கிரமங்கள் புரியத் தலைப்பட்டோம்!”

இம்மாதிரி எண்ணத்தில் லயித்த ரமாநாத்தின் கண்களில், கோபக் கனல் வீசும் கண்களுடன் கூடிய காளி தேவியைப் போன்று பத்மாவின் உருவம் தோற்றமளித்தது. “அப்பா! அவளுக்குத்தான் என்ன கோபம்! அவன் இவ்வளவு கோபித்துக் கொள்ளுவாள் என்று தெரிந்திருந்தால், உலகமே தலைகீழாகப் போனாலும் சரி, நான் என் சாட்சியத்தைக் கட்டாயம் மாற்றிக் கொண்டிருப்பேனே! போலீஸார்கள் பசப்பு வார்த்தைகள் பேசியல்லவா என்னை மயக்கி விட்டார்கள்! ஜட்ஜ் நம் சொல்லுக்குச் செவிசாய்க்காமல் இருந்து விட்டால் - குற்றவாளிகளை விடாமல் இருந்து விட்டால் - பத்மா என் முகத்தில் விழிக்கக்கூட மாட்டாளே! அந்த மாதிரி நிலைமையில் நான் உயிர் வாழ்ந்துதான் என்ன பிரயோசனம்? யாருக்காக நான் உயிர் வாழ வேண்டும்?”

ரமாநாத் மோட்டாரை நிறுத்திவிட்டு இங்கும் அங்கும் ஒரு முறை பார்த்தான். 'நாம் எங்கே வந்திருக்கிறோம்?' என்றே அவனுக்கு விளங்கவில்லை. அப்பொழுது ஒரு பாராக்காரன் அவ்வழியே வந்து கொண்டிருந்தான். ரமாநாத் அவனை அருகில் அழைத்து ஜட்ஜின் விலாசத்தைக் கேட்டான். பாராக்காரன் இலேசாகச் சிரித்துக் கொண்டு, “எசமான், ரொம்ப தூரம் அல்லவா வந்து விட்டீங்க. அவருடைய வீடு இங்கே யிருந்து ஆறு எழு மைலுக்கு மேலே இருக்குமே! அவருடைய வீடு 'சௌரங்கி'க்குப் பக்கத்திலே இருக்குது” என்றான்.

ரமாநாத் சௌரங்கிக்கு வழி கேட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டான். மணி ஒன்பது அடித்து விட்டது. ஜட்ஜைப் பார்க்க முடியாமற் போய் விட்டால் காரியம் கெட்டுவிடுமே! இன்றைக்கு அவரை எப்பாடு பட்டாவது பார்த்து விட்டுத்தான் மறு காரியம் பார்க்க வேண்டும். அவர் நம் வார்த்தைக்குச் செவி சாய்த்தால் சரி, இல்லா விட்டால் ஹைகோர்ட்டு அப்பீலின் பொழுது அந்த ஜட்ஜுகளுக்கெதிரே சொல்லி விடுவோம். யாராவது ஒருவர் கூடவா நம் சொல்லுக்குச் செவிசாய்க்காமல் போய்விடப் போகிறார்கள்! அப்படிக் கேட்கவில்லையென்றால், சகல விருத்தாந்தங்களையும் ஒரு சமாசாரப் பத்திரிகையில் வெளியிட்டு விடுவோம்! அப்புறமாவது அவர்களுடைய கண்கள் திறந்துதானே ஆக வேண்டும்?......

மோட்டார் முப்பது மைல் வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. பத்தே நிமிஷத்தில் சௌரங்கிக்கு வந்து விட்டது. ஜன நடமாட்டம் குறையவில்லை. ஆனால் ரமாநாத் அதே வேகத்தில் மோட்டாரை ஓட்டிக் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு போலீஸ்காரன் சிவப்பு விளக்கைக் காட்டினான். ரமாநாத் காரை நிறுத்தித் தலையை வெளியே நீட்டிப் பார்த்தான். அவனுக்குத் தெரிந்த அதே ஸப் இன்ஸ்பெக்டர் காட்சி அளித்தார்.

"என்ன, நீங்கள் இன்னும் பங்களாவுக்குப் போக வில்லையா? இவ்வளவு வேகமாக மோட்டாரை ஓட்டாதீர்கள். யார் மீதாவது மோதி விட்டால்......? ஆமாம், சம்சாரத்தைப் பார்த்தீர்களா? அவளும் உங்களுடன் வருவாள் என்றல்லவா நான் எண்ணினேன்! உங்களைப் பார்த்ததும் அவள் அப்படியே பூரித்துப் போயிருப்பாள்!" என்று சிரித்துக் கொண்டே ஸப் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்.

ரமாநாத்துக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அந்த ஸப் இன்ஸ்பெக்டரின் மீசையைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்க வேண்டும்' என்றுகூடத் தோன்றிற்று. ஆனால் அவன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ஆமாம், ஆமாம்! அவளுக்கு என்ன சந்தோஷம் என்கிறீர்கள்! நீங்கள் சொல்லுவதுபோல அப்படியே பூரித்துப் போய் விட்டாள்!" என்றான்.

"நான்தான் அப்பொழுதே சொன்னேனே! பெண்களின் கோபத்தைப் போக்குவதற்கு அதுதான் ஸார், சரியான மருந்து! நீங்கள்தான் வீணில் பயந்தீர்கள்!"

"ஆமாம், ஸார்! அதை என்னுடைய அடிமுட்டாள்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்!"

"சரி, வாருங்கள். நானும் உங்களுடனேயே வருகிறேன். போய் ஒரு சீட்டு ஆட்டம் போடுவோம். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரும், டிபுடியும்கூட வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குட்டி 'ஜொஹரா'வையும் அழைத்துக் கொண்டு வரச் சொல்லுவோம். அவளும் வந்தால் இன்னும் குஷியாகப் பொழுது போகும்! ஆமாம், நீங்கள் மிஸஸ் ரமாநாத்தையும் நம் பங்களாவுக்கே அழைத்துக் கொண்டு வந்து வைத்துக் கொள்ளலாமே! அவர்கள் அந்தக் கிழவன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு கஷ்டப்படுவானேன்?"

"அது சரி. எனக்கு ஒரு வேலையாக அந்தப் பக்கம் போகவேண்டியிருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் மோட்டாரை எடுத்துக் கொண்டு போங்கள். நான் நடந்தே போய் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து விடுகிறேன்" என்றான் ரமாநாத்.

ஸப் இன்ஸ்பெக்டர் மோட்டாரில் ஏறி உட்கார்ந்து கொண்டு, "இல்லை, ஸார்! எனக்கு ஒன்றும் அவசரமில்லை. உங்கள் வேலையை முடித்துக் கொண்டு வாருங்கள். நான் காத்திருக்கிறேன்" என்றார்.

ரமாநாத் முகத்தைச் சிணுங்கிக் கொண்டு, "இப்பொழுது நான் பங்களாவுக்கு வரப்போவதில்லை" என்றான்.

"ஹி...ஹி...ஹி...நீங்கள் சொல்லுகிறது எனக்குப் புரிகிறது, ஸார்! அம்மாவைப் பார்க்கத்தானே......" என்று கோணிக் கோணிக் கொண்டு கூறியவண்ணம் ஸப் இன்ஸ்பெக்டர் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

ரமாநாத் குறுக்கிட்டு, "அதெல்லாம் இல்லை, ஸார்! நான் அங்கே போக வில்லை" என்றான்.

"அப்படியானால் வேறு எங்கேயாவது வலை வீசி யிருக்கிறீர்களோ? பங்களாவிலேயே வேண்டுமென்றாலும் அதற்கு ஏற்பாடு செய்து விடுகிறோம், ஸார்!" என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

ரமாநாத் கண்களில் கோபக் கனல் வீச, "நான் அவ்வளவு மோசமானவன் இல்லை. ஞாபகமிருக்கட்டும்!" என்றான்.

ஸப் இன்ஸ்பெக்டர் வெட்கிப் போய், "ஸார், ஏதோ தவறிச் சொல்லி விட்டேன்; மன்னிக்கவேணும். இனிமேல் இம்மாதிரியெல்லாம் பேச மாட்டேன். ஆனால் ஒன்று, நீங்கள் இப்படியெல்லாம் தன்னந் தனியே போகவே கூடாது. உங்களை இன்னும் ஆபத்து விட்டபாடில்லை. உங்கள் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். உங்களுக்கு எத்தனையோ விரோதிகள் இருக்கக் கூடும். அதனால்தான்......" என்று இழுத்தார்.


ரமாநாத் உதட்டைக் கடித்துக் கொண்டு, "நீங்கள் என் நன்மை - தீமைகளைப் பற்றிச் சிந்திக்காமல் இருப்பதுதான் நல்லது என்று தோன்றுகிறது. 'குதிரை கீழே தள்ளியதும் அல்லாமல் குழியையும் பறித்ததாம்!' என் வாழ்வைக் குலைத்துக் குட்டிச்சுவராக்கிய பாவிகள் அல்லவா நீங்கள்? போதும் உங்கள் சகவாசம்! உங்களிடம் மாட்டிக் கொண்டு நான் கஷ்டப்பட்டது போதும்! என்னை என் இஷ்டப்படி இருக்க விடுங்கள்; இவ்வளவு நாட்கள் வாழ்ந்த இந்த அடிமை வாழ்வு போதும்! உங்களுக்கு இந்த மோட்டார் தானே வேண்டும்? தாராளமாய் எடுத்துப் போங்கள். இந்த மோட்டார் சவாரிக்காகவும், பங்களா வாசத்துக்காகவும், நான் பதினைந்து பேரைப் பலியிட நேர்ந்

தது. ஒரு வேலை கிடைப்பதற்கு, நான் இம்மாதிரி இன்னும் எத்தனை பேரைக் கொலை செய்யவேண்டி வருமோ? கடவுள் தான் அறிவார். அப்பப்பா! என் நெஞ்சு அவ்வளவு கல் நெஞ்சு அல்ல. உங்கள் மோட்டாரை எடுத்துக் கொண்டு போங்கள்" என்று சொன்னான்.

உடனே ரமாநாத் மோட்டாரை விட்டு இறங்கி 'விடுவிடு' என்று வெகு வேகமாக நடந்தான். ஸப் இன்ஸ்பெக்டர் "ஸார், ஒரே ஒரு வார்த்தை! கேட்டு விட்டுப் போங்கள்!" என்று எவ்வளவோ தடவைகள் கூப்பிட்டுப் பார்த்தார். ஆனால் அவன் அவருடைய வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளவும் இல்லை; திரும்பிப் பார்க்கவும் இல்லை. இன்னும் சிறிது தூரம் சென்றதும் அவன் ஒரு திருப்பத்தில் திரும்பி மறைந்து விட்டான்.

அதே தெருவில்தான் ஜட்ஜின் பங்களா இருந்தது. அந்தத் தெருவில் அதிக ஜன நடமாட்டம் இல்லை. ரமாநாத் ஒவ்வொரு பங்களாவாக உற்றுக் கவனித்துப் பார்த்துக் கொண்டே போனான். ஒரு பங்களா வாசலில் போர்டைப் பார்த்ததும் அவன் நின்றான். உள்ளே யிருந்து யாராவது வெளியே வந்தால், 'ஜட்ஜ் இருக்கிறாரா?' என்று கேட்டுப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் வெகு நேரம் வரை அவன் அங்கே நின்று பார்த்தான். ஆனால் உள்ளே போய் விசாரிக்க அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை. 'ஆமாம், நீ ஏன் பொய்ச் சாட்சி சொன்னாய்?' என்று ஜட்ஜ் கேட்டால் என்ன பதில் சொல்லுவது? போலீஸார் என்னைப் பலவந்தப் படுத்தினார்கள்; 'அடிப்பேன்' என்று பயமுறுத்தினார்கள்; ஆசை காட்டினார்கள் என்றெல்லாம் சொல்லுவது மிகவும் வெட்ககரமான விஷயம். 'இரண்டு மூன்று வருஷத்துச் சிறைத் தண்டனைக்குப் பயந்து, இத்தனை பெரிய அக்கிரமச் செயல் செய்வதற்கு உன் மனம் எப்படி இடம் கொடுத்தது? அந்தச் சமயம் உன் புத்தி எங்கே போயிருந்தது?' என்றெல்லாம் அவர் கேள்விகளுக்குமேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனால், நான் என்ன பதில் சொல்ல முடியும்? வீணில் அவமானப்பட நேரும்; முட்டாள் பட்டம் கட்டிக் கொள்ள நேரும்.

இந்தச் சிந்தனை எழுந்ததும், அவன் வந்த வழியே திரும்பினான். மான அவமானத்தை எதிர்த்துப் போராடும் வன்மை அவனிடம் இல்லை. இந்த மான அவமானத்துக்கு இருக்கும் சக்தி வேறு எதற்கும் கிடையாது. பெரிய பெரிய வீரர்கள்கூட இதற்கு முன்னிலையில் கைகட்டி வாய் புதைத்து நிற்க வேண்டியதாகி விடுகிறது. காலனுக்கும் அஞ்சாத எத்தனையோ வீரப்புலிகள் இந்த மான அவ



மானத்துக்கு அஞ்சிச் சாகிறார்கள். தீக் குளிப்பதோ, கத்திக்கு இரையாவதோ இதைவிட மிகமிக சுலபம். சொந்த மானத்தைக் காப்பதற்காக எத்தனையோ பெரிய பெரிய அரசாங்கங்கள் அழிந்திருக்கின்றன. ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியிருக்கிறது; லட்சக் கணக்கான பிராணத் தியாகங்கள் நடந்திருக்கின்றன. அதே மானம்தான் ரமாநாத்தின் கால்களை மேலே செல்லவொட்டாமல் பின்னுக்கு இழுத்தது. அவன் சிறைத் தண்டனைக்குக்கூட அவ்வளவு அஞ்சியிருக்க மாட்டான்!

நாற்பத்தைந்தாம் அத்தியாயம்

உரிமை பறிமுதல்!

ரமாநாத் நள்ளிரவுக்குப் பிறகுதான் தூங்கினான். ஆகவே அவனுக்கு மறுநாள் காலை ஒன்பது மணிக்கு முன்னால் விழிப்பு உண்டாகவில்லை. அவன் கனவு கண்டு கொண்டிருந்தான் — தினேஷ் தூக்கு மேடையில் நிற்கிறான்; கயிறு அவன் கழுத்தை இறுக்கத் தயாராயிருக்கிறது. அதே சமயம் ஒரு பெண் கையில் கத்தியுடன் வெகு வேகமாக ஓடி வந்து தூக்குக் கயிற்றைத் துண்டித்து விடுகிறாள். நாற்புறங்களிலும் அமளி ஏற்படுகிறது. அந்தப் பெண் வேறு யாரும் இல்லை; பத்மாதான். யாருக்குமே அவளருகில் செல்லத் துணிவு உண்டாகவில்லை. அவள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ரமாநாத்தின்மீது கத்தியை வீசுகிறாள். ரமாநாத் உடனே திடுக்கிட்டு விழித்து எழுந்து உட்கார்ந்தான். எதிரே லப் இன்ஸ்பெக்டரும், ஸர்க்கின் இன்ஸ்பெக்டரும் நின்று கொண்டிருந்தனர். டிபுடி ஸுபரின்டென்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் சிகரெட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார்.

ரமாநாத் எழுந்து உட்கார்ந்திருப்பதைக் கவனித்ததும் லப் இன்ஸ்பெக்டர், "இன்றைக்கு, ரொம்ப நல்ல தூக்கம் தூங்கினீர்களே! நேற்றுத் திரும்பி வரும்பொழுது நேரமாகி விட்டதோ?" என்று கேட்டார்.

ரமாநாத் எழுந்து வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே, "இல்லை, சிறிது நேரத்துக் கெல்லாம் திரும்பி வந்து விட்டேன். ஆமாம், ஹைகோர்ட்டில் இந்த வழக்குக்கு அப்பீல் செய்யப் போகிறார்களா?" என்று கேட்டான்.

"அப்பீல் என்ன? பெயருக்குச் சட்ட நுணுக்கங்களைப் பற்றிப் பேசுவார்கள்! நீங்கள்தான் வழக்கை மிகவும் பலப்படுத்தி விட்டீர்களே! இனிமேல் எவனாலும் அதை அசைக்க முடியாது. உண்மையாகச் சொல்லுகிறேன்: நீங்கள் வழக்கை வெகு அழகாக ஜோடித்து விட்டீர்கள், ஸார்! இனிமேல் அதைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப் படாதீர்கள். ஆனால் ஒரு விஷயம். தீர்ப்பு முடிகிறவரையில், நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஹைகோர்ட்டுத் தீர்ப்பு முடிய வேண்டியதுதான் தாமதம், உங்களுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்துவிடும்" என்றார் ஸர்க்கின் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம், ஸார்! உங்களுக்கு எவ்விதமான சந்தேகமும் ஏற்படக்கூடாதல்லவா! அதற்காக ஸுபரின்டென்டு ஐக்கிய மாகாணத்து ஹோம் செக்ரெட்டரியின் பெயருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதை உங்களிடமே கொடுக்கச் சொன்னார். அந்தக் கடிதத்தை நீங்கள் அவரிடம் கொண்டு போய்க் கொடுத்தீர்களானால், அவர் உங்களுக்கு உடனே ஒரு நல்ல வேலை செய்து வைத்து விடுவார்" என்று டிபுடி ஸுபரின்டென்டு சிகரெட்டுப் புகையை வெளியவாறே சொன்னார்.

"உங்கள் மேல் ஸுபரின்டென்டுக்கு அபாரப் பிரியம், ஸார்!" என்றார் ஸர்க்கின்.

"ஆமாம், ஆமாம். அவர் தனியாக வேறு உங்களைப் பற்றி நன்றாகச் சிபாரிசு செய்து ஒரு கடிதம் எழுதப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்" என்று சொல்லிக்கொண்டே டிபுடி ஸுபரின்டென்டு 'டிபார்ட்மென்டல் ஆர்டரை' ரமாநாத்திடம் நீட்டினார். ரமாநாத் கவரை உடைத்து மேலெழுந்தவாறு ஒரு முறை பார்த்தான். பிறகு அந்தக் கடிதத்தைச் சுக்குநூறாகக் கிழித்துக் கசக்கிக் கீழே போட்டான். அதைக் கண்ட மூவரும் அசந்துபோய் அவனுடைய முகத்தையே பார்க்கலாயினர்.

"நீங்கள் செய்யும் காரியம் கொஞ்சங்கூட நன்றாயில்லை. ஸுபரின்டென்டுக்கு

இந்தச் சமாசாரம் தெரிந்து விட்டால் பிரமாதமாகக் கோபித்துக் கொள்ளுவாரே!" என்றார் லர்க்கின்.

"இவர் இம்மாதிரிச் செய்வதற்கு என்ன அர்த்தம்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!" என்றார் டிபுடி.

"உங்களுக்கு விளங்கவில்லையா? எனக்கு உங்கள் சிபாரிசும் வேண்டாம்; வேலையும் வேண்டாம். அதற்காகத்தான் நான் அப்படிக் கிழித்தெறிந்தேன். நான் இன்றைக்கே இவ்விடத்தை விட்டுப் போய் விடப் போகிறேன்" என்று வெகு துடுக்குடன் ரமாநாத் பதில் அளித்தான்.

"ஹைகோர்ட்டுத் தீர்ப்பு முடிந்தாலொழிய நீர் எங்கும் வெளியே போக முடியாது!"

"ஏன் போக முடியாது?" என்று ரமாநாத் குறுக்கிட்டுக் கேட்டான்.

"சூபரிண்டெண்டு அப்படி உத்தரவிட்டிருக்கிறார்" என்றார் டிபுடி.

"நான் யாருக்கும் அடிமை அல்ல. நினைவிருக்கட்டும்" என்றான் ரமாநாத.

"ரமாநாத பாபு, காரியம் முடியும் தறுவாயில் இருக்கிறது. இந்தச் சமயம் எதற்காக இப்படி விஷயத்தைக் குழப்புகிறீர்கள்? நடப்பது நடந்து விட்டது. இனி அதைப் பற்றிப் பேசி என்ன பயன்? இன்னும் பத்தே நாட்களில் ஹைகோர்ட்டு தீர்ப்பைச் சொல்லப் போகிறது. என்னைக் கேட்டால், உங்களுக்குக் கிட்டப்போகும் சௌகரியங்களை இழக்காமல் கைப்பற்றிக் கொண்டு ஆனந்தமாக வாழ்க்கை நடத்துவதுதான் கெட்டிக்காரத்தனம் என்று சொல்லுவேன். எதற்காக வாழ்வைக் குலைத்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள்? கடவுள் கருணையிருந்தால் என்றைக்காவது ஒரு நாள், உங்களைப் புகழும் பணமும் தேடி வரும்; பெரிய பதவியும் கிட்டும். ஆபீஸர்களின் கோபத்துக்கு இரையாகிச் சிறைத் தண்டனை அனுபவிப்பதனால் உங்களுக்கு என்ன கிட்டப்போகிறது? உண்மையைச் சொல்லுகிறேன், ஆபீஸர்களுக்கு ஆத்திரம் உண்டாகும் வகையில் நடந்து கொண்டீர்களானால், உங்களை ஆழக் குழி தோண்டிப் புதைத்து

காந்தி மகான் திருவாக்கு - 5

நான் ஹிந்து - முஸ்லிம்களிடையே நெருங்கிய பந்தமும் ஒற்றுமையும் உண்டாக்கக்கூடிய ஒரு சிறந்த சாதனமாக வேண்டும் என்பதற்காகப் பிரயத்தனப் படுகிறேன். அவசியமானால், என்னுடைய இரத்தத்தைச் சிந்தியாவது ஹிந்து முஸ்லிம்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்பதே என் ஆசையும் ஆவலுமாகும். ஆனால் நான் அவ்விதம் செய்வதற்கு முன்னால், ஹிந்துக்களிடம் எனக்கு எவ்வளவு அன்பு உண்டோ அவ்வளவு அன்பு முஸ்லிம்களிடமும் எனக்கு உண்டு என்பதை ருசுப்படுத்தவேண்டும். எல்லோரிடமும் சமமாக அன்பு பாராட்டவேண்டும் என்று என்னுடைய தர்மம் போதிக்கிறது. அவ்விதம் செய்ய ஆண்டவன் எனக்கு அருள்புரிவானாக!

** ** ** **

நான் செய்யும் ஒவ்வொரு காரியமும் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டது. நான் இப்போது என் சக்தியை எல்லாம் உபயோகித்துப் பாடுபட்டுவரும் தீண்டாமை, கதர், கிராமப்புனருத்தாரணம் ஆகிய மூன்று பொது வேலைகளும் அஹிம்சையை ஆதாரமாகக் கொண்டவை. நான்காவதாக, அதிகம் விரும்புவது ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமையாகும். வெளிப்படையாகப் பார்க்கும்போது இதில் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை; இதுவரையில் தோல்வியே கிடைத்திருக்கிறது.

ஆனாலும் நான் நிராசை அடைந்து விடவில்லை. ஹிந்து முஸ்லிம்களுக்குள் சகோதரபாவத்தை உண்டாக்குவதில் என்னுடைய அளவிலாத ஆர்வத்தை நான் உயிரோடு இருக்கும்போது தெரிந்து கொள்ளாவிட்டாலும், நான் இறந்த பிறகாவது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தெரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

விடுவார்கள். பத்து வருஷ காலம் சிறைக்குள் வாடிப் புழுங்கும்படி செய்து விடுவார்கள். ஆகையால் நீங்கள் நினைப்பதெல்லாம் வீண் பகற் கனவு என்பதை மறந்து விடாதீர்கள்" என்றார் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

"பெண்டாட்டி பேச்சைக் கேட்டு இவர் இப்படியெல்லாம் கெட்டுப் போகிறார், ஸார்! எதற்காகத்தான் பெண்டாட்டியிடம் இப்படிப் பயந்து சாகிறாரோ, தெரியவில்லை!" என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

"ஆமாம், ஸார்! நேற்று ஹாரம் ஒன்று வாங்கிக் கொண்டு போனீர்களே! அது என்ன வாயிற்று? அம்மாள் அதை வாங்கிக் கொண்டார்களா?" என்று விசாரித்தார் ஸர்க்கிள்.

ரமாகாந் கோட்டுப் பையிலிருந்து அந்த ஹாரத்தை எடுத்து மேஜைமேல் வைத்து "இந்தாருங்கள், அந்த ஹாரம்!" என்றான்.

"ஏன்? அம்மாளுக்கு இது பிடிக்கவில்லையா, என்ன?" என்று கேட்டார் ஸர்க்கிள்.

"மண்டைக் கர்வம் பிடித்த பெண்பிள்ளையாக இருப்பாள் போலிருக்கிறதே!" என்றார் டிபுடி.

"ஆமாம், ஸார்! அப்படித்தான் தோன்றுகிறது. அவளை அடக்க ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும்!" என்றார் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

"ரமாகாந்தபாபு நல்ல விதமாக நடந்து கொண்டால், நாம் அந்த வழிக்கெல்லாம் போக வேண்டியதில்லை. வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக இவர் நடந்து கொண்டால் நாம் நம்முடைய கை வரிசையைக் காட்டித்தான் ஆகவேண்டும்" என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

"அந்தக் கிழவனிடமும் முச்சலிக்கை எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும்" என்றார் டிபுடி.


இந்தப் பேச்சைக் கேட்டதும் ஒரு புதிய, தீராத பிரச்னை ரமாகாந்தின் மனத்தில் முளைத்தெழுந்தது. அவன் கடமைக்காகத் தன்னையே அர்ப்பணம் செய்யவும், நான்கைந்து வருஷங்கள் கடுந்தண்டனை அனுபவிக்கவுங்கூடத் தன்னைத் தயார் செய்து கொண்டு விட்டான். ஆனால் பத்மாவையும் தன்னுடன் சங்கடத்தில் சிக்க வைக்க அவனுடைய மனம் சிறிதும் இடம் கொடுக்கவில்லை. போலீஸாரின் பிடியில் வகையாக மாட்டிக் கொண்டிருந்த அவனுக்குத் தன்னை விடுவித்துக்கொள்ள வழி தோன்றவில்லை. 'நம்மால் போலீஸாரை எதிர்த்துப் போராட முடியாது' என்ற அதைரியம் மனத்தில் உதித்தது தான் தாமதம், அவன் கட்டியிருந்த மனக் கோட்டைகள் எல்லாம் சரிந்து விட்டன; மன உறுதி எல்லாம் அடங்கி விட்டது. அவன் அசந்து போய், "அப்படியானால் உங்கள் விருப்பம் என்ன?" என்றான்.

ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர், 'ஆள் வழிக்கு வந்து விட்டான்' என்று சொல்லுவதற்கு அடையாளமாக ஸப் இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கண் சிமிட்டினார். பிறகு, "எங்கள் விருப்பம் என்னவென்றால், 'ஹைகோர்ட்டுத் தீர்ப்பு முடியும் வரையில் நீங்கள் எங்கள் விருந்தாளியாக இருக்க வேண்டும்' என்பதுதான். அதற்குப் பிறகு உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்களுக்கு இராது. நீங்கள் உங்கள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாம். உங்களுக்கு ஏதாவது 'சர்டிபிகேட்' வேண்டுமென்றால், தருவதற்கான ஏற்பாடு செய்கிறோம். அதை வாங்கிக் கொள்ளுவதோ, வாங்கிக் கொள்ளாமல் இருப்பதோ உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. நீங்கள் கெட்டிக்காரராயிருந்தால், அதை வாங்கிக் கொண்டு எவ்வளவோ சௌகரியங்கள் தேடிக் கொள்ள வசதியிருக்கிறது. இல்லாவிட்டால் வாழ்க்கையில் அடிபட்டுத் தட்டுத் தடுமாறி அல்லல் உறுவீர்கள். ஏதோ நாங்கள் நல்லதைச் சொல்லுகிறோம். கேட்டால் கேளுங்கள், கேட்கா விட்டால் போங்கள். நீங்கள் இங்கேயிருக்கும் வரையில் உங்களுக்குத் தேவையான சகல சௌகரியங்களையும் செய்து தர நாங்கள் சித்தமாயிருக்கிறோம். ஆனால் வழக்கு முடியும்வரை, உங்களுக்கு எவ்விதமான சுதந்திரமும் தருவதற்கில்லை" என்றார்.

ரமாகாந் குரலில் எளிமை ததும்ப "உலாவுவதற்காவது நான் வெளியே போய் வரலாம், அல்லவா?" என்று கேட்டான்.


ஸர்க்கிள் இரத்தினச் சுருக்கமாக "அதற்குமே அனுமதி இல்லை!" என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மூவரும் அங்கிருந்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர். ரமாகாந் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, தன்னுடைய பயங்கர நிலைமையைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். (தொடரும்)


A.V.S.
டாபியோகா மாவு
எங்கும் பிரசித்தி பெற்றது.
தயாரிப்பில் நற்சாட்சி பெற்றது.
ERODE
A.V.S.
TAPIOCA
A. V. சுப்ரமண்யம்
(Tel: "INSAF")
ஈரோடு.
(S. INDIA)


இருமல்களுக்கும்
ஜலதோஷத்திற்கும்
உபயோகிக்க மறக்காதீர்கள்
ஸிரோலின்
"ரோச்"
உலகெங்கும் உபயோகிக்கப்படுகிறது

நோயுற்ற குழந்தைகளுக்குப் பல வருடங்களாக சேவை புரிந்து வருகிறது





ஜம்மியின் லிவர்க்யூர் பல்லாண்டுகளாக செய்து வரும் சேவையால் ஆயிரக்கணக்கான விலையற்ற சிற்றுயிர்கள் ஈரல் குலைக்கட்டி வியாதிகளிலிருந்து காப்பாற்றி மனித சமூகத்திற்கு விசேஷ நன்மை புரிந்துவருகிறது.

டாக்டர்கள் இவ்வியாதியைபோக்க ஆரம்ப நிலை, கட்டி முதிர்ந்த நிலைக்குத்தகுந்தவாறு 'சிம்பிள்' அல்லது 'காம்ப்பிளிகேட்டட்' லிவர்க்யூர் மருந்துகளை சிபார்சு செய்து இவ்வியாதியை குணப்படுத்துகிறார்கள்.

ஜம்மியின் சிம்பிள் லிவர்க்யூர் சிறிய அளவில் கொடுத்துவர, வியாதி வராமல் தடுக்கவும், பசி. ஜீரண சக்திவிருத்தி செய்யவும் மலச்சிக்கலைப் போக்கி ஈரல், குலைகளை சரியானபடி வேலைசெய்கிறது.

முன்னால் ஈரல் குலைக்கட்டி நோயினால் பிடிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் திரும்பவும் கர்ப்பம் தரிக்கும் பொழுது ஜம்மியின் டானிக்கை உபயோகப்படுத்துவது நல்லது. பிறக்கப்போகும் குழந்தையின் ஈரல், குலைகள் தாய் மூலமாய் ஏற்படுகிறது என்ற ஆயுர்வேத சித்தாந்தத்தை அனுசரித்து இந்த டானிக் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜம்மியின் லிவர்க்யூர்



எங்கும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்

மைலாபூர், மதராஸ். (போன் நெ. 8139)

தேப்பகுளம். திருச்சினாப்பள்ளி. பெரிய தெரு கும்பகோணம். பெங்களூர், பம்பாய் 4, (போன் நெ. 41593) மற்றும்: கல்கத்தா, லக்னோ, etc.

ADARTS J. 234 TAMIL

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI பிப்ரவரி 22, 1948

4 அணா

ஸ்ரீ இந்தியன் பாங்க்
லிமிடெட்

●

தலைமை ஆபீஸ் :
" இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் "
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

●

லோகல் ஆபீஸ்கள் :
எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

●


வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	53,00,000
ரிசர்வ் நிதி	ரூ.	62,00,000

●

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி

3 பொக்கிஷங்கள்



ஏஜண்டுகள் :

ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பேர்ஹாம் பூச் சீ செகந்திராபாத்; கெஜூர மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

சிலோன் ஏஜண்டுகள் :

M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு

REGD. No. M. 4392



குளுமை உங்கள் கூடவே இருக்க

ஒருசில துளிகள் "போர்ஸீசன்" ஓடிக்கோலன் அவ்வளவு புதுமையளிக்க வல்லது --- பகல் வேளை உஷ்ணத்திலும்சரி. அல்லது சாயங்கால உல்லாசப் பொழுது போக்கு சமயத்திலும்சரி. நீங்கள் இணையிலாவசீகரத்துடன் விளங்குவதின் இரகசியம் அதன் குளுமையும் புதுமை யளிக்கும் நறுமணமுமே யாகும்.

Coty

கோட்டி

"போர் ஸீசன்ஸ்"

ஓடி க் கொலன்

100, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை

EC2